**CHARTERED ACCOUNTANCY**
**CAB II ENGLISH MEDIUM**
**STARTED ON 09.02.2012**
**VEAL BUSINESS COLLEGE**
Contact : 0777 555 738

மாசி மாதம் 11ம் திகதி

February 23, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 31

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை - 20.00 | Registered as a Newspaper in Sri Lanka | பக்கங்கள் - 10 | பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# 43 லட்சம் ரூபாய்கள் கையாடல்..
# சந்தேகத்தில் சந்தைப்படுத்தல்
# நிர்வாகி கைது!

**தி**ருக்கோணமலை நகர மெட்ரோபொலிட்டன் கம்பனியின் விற்பனைப் பிரிவில் கடமையாற்றி வந்த விற்பனை அதிகாரி சுமார் 4.3 மில்லியன் ரூபாய்ப் பணத்தை கையாடியுள்ளதாக சந்தேகத்தின் அடிப்படையில் காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் பணத்தைக் கையாடத் தொடங்கியிருந்தமையை உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் வெளிக்காட்டத் தொடங்கியதைத் தொடர்ந்து இக் கையாடலுக்காக இவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வங்கியில் வைப்பில் இடுவதற்காகக் கொண்டு சென்ற காசோலைகளின் மூலமே இக் கையாடல் நடந்தேறியுள்ளது. ஆரம்பத்தில் 1.5 மில்லியன் ரூபாய்ப் பணமே மோசடி செய்யப்பட்டதாக இவ் விற்பனை அதிகாரியின் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. அப் பணத்தை அவர் மீளச் செலுத்திய போதிலும் பின்னர் நடந்த விசாரணைகளின் மூலம் மேலும் 3 மில்லியன்கள் கையாடப் பட்டது தெரியவந்துள்ளது. விசாரணைகள் தொடர்கின்றன.

## மாணவர்களிடம் பணம் அறவிட்டால் அதிபர்களுக்கு எதிராக நடவடிக்கை

**கி**ழக்கு மாகாணத்திலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் அரசாங்க பாடசாலைகளாகவே உள்ளன எனவே அரசாங்க பாடசாலைகளில் மாணவர்களிடம் பணம் அறவிடப்படுமானால் அப்பாடசாலை.. (7ம் பக்கம்)

## கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் கிழக்கில் நியமனம்

**பு**திதாக தேர்வு செய்யப்பட்ட 39 கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள் தமது நியமனங்களைப் பெற்றுள்ளனர்.

மாகாணச் சுகாதாரத் திணைக்களக் கேட்போர் கூடத்தில் 15.02.2013இல் நியமனம் வழங்கும் நிகழ்வில் இவர்கள் தமக்கான நியமனங்களைப் பெற்றனர். (7ம் பக்கம்)

## "கால்நடை விவசாயிகள் விழா"
### - மூதூர் -

**"பீஸ் விண்ட்"** ஜப்பானிய அரசு சார்பற்ற நிறுவன உதவியுடன் கிழக்கின் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் மூதூர் பிரதேசத்தில் கால்நடை விவசாயிகள் விழாவை சிறப்பாக நடாத்தி முடித்துள்ளது.

இவ் விழாவில் மூதூர் பிரதேசத்தின்.. (7ம் பக்கம்)

## ஜப்பானிய அரசின் 80 மில்லியன் ரூபாய்
### -திருமலை மாவட்டத்துக்கு-

**தி**ருக்கோணமலை மாவட்டத்தின் மீள்குடியேற்ற பகுதிகளில் வாழ்வாதார அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக 80 மில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளது.


விவசாயம், கால்நடை வளர்ப்புப் பிரதேசங்களில் மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதாரங்களை.. (7ம் பக்கம்)

## "திரியாய் தூபிப் புணர்நிர்மாணத்திற்கு மில்லியன் ரூபாய் கொடை"

**ப**ழம் பெருமை வாய்ந்த திரியாய் துாபி (கிரிவிழந்து ஸ்துாபா)ப் புணர்நிர்மானிப்புக்கு 65 மில்லியன் ரூபாய்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

ஜோன்கீல்ஸ் கம்பனிக் குழுமமும் இலங்கைப் புகையிலைக் கம்பனியும் இணைந்து இத் தொகையினை வழங்கியுள்ளன.

இவ்வாரம் இத்தொகையினை பாதுகாப்பமைச்சின் செயலாளரிடம் காசோலையாக இவ் இரு கம்பனிகளும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.







## பர்தாவுக்கெதிராக பொதுபலசேன சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முயற்சி

ஹலால் சான்றிதழுக்கு எதிராகக் களம் இறங்கி இலங்கை அரசியற் களத்தில் முத்திரை பதித்துள்ள பொதுபல சேனா அமைப்பு தற்போது முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தா முகத்திரைக் கெதிராக மீண்டும் களம் புகவுள்ளது.

இதற்கான சட்ட நடவடிக்கைகளில் பொதுபலசேனா அமைப்பு இறங்குவதற்கான ஆலோசனைகளில் தற்போது ஈடுபட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது

## கட்டைப்பறிச்சான் வடக்குப் பகுதியில் நகைப்பறி

கடந்த 17.2.2013 அன்று மூதூர் - கட்டைப்பறிச்சான் வடக்கு பகுதியில் பலசரக்கு கடை ஒன்றிற்கு உந்துருளியில் வந்த இருவர் நகைப்பறிப்பில் ஈடுபட்டுள்ளனர். அங்கு வந்த இருவரில் ஒருவர் உந்துருளியில் ஆயத்தமாக இருக்க மற்றைய நபர் பொருள் கொள்ளவனவு செய்யும் பாவனையில் கடையின் பெண் உரிமையாளரின் தங்க சங்கிலியை பிடித்து அறுக்க முயன்று இருக்கிறார். அபகரிக்கும் போராட்டத்தில் பாதி சங்கிலியை அறுத்து எடுத்துவிட்டு... (7ம் பக்கம்)

aat SRI LANKA

2013 ஜனவரி பரீட்சைகளுக்கான மாணவர் பதிவுகள் தற்போது ஆரம்பம்

க.பொ.த. (சா/த) பரீசையில் 06 பாடங்களில் சித்தியெய்திய மற்றும் தற்பொழுது க.பொ.த (உ/த) கற்றுக் கொண்டிருக்கும் எந்தவொரு மாணவரும் பதிவுசெய்து கொள்ள முடியும்.



VEAL BUSINESS COLLEGE
VISIT US : 159 A, Sea View Road, Trincomalee. CALL US : 026 222 7622 / 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

## கொள்ளை!!!

கடந்த வாரம் திருக்கோணமலை மாவட்டத்தில் மூன்று வழிப்பறிக் கொள்ளைகள் நிகழ்ந்துள்ளன.

அவை மூன்றுமே பெண்களைக் குறிவைத்துத் தாக்கியிருந்ததுடன் உந்துருளியில் வந்த முகக் கவசம் அணிந்த இருவராலேயே அக் கொள்ளைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

செல்வநாயகபுரம் சந்தியிலிருந்து நகரப் பிரதேச சபையின் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவியின் சங்கிலியொன்று களவாடப்பட்டது. அடுத்து நகரப் பகுதியில் பாரதி தெருவில் நடந்து சென்று கொண்டிருந்த நடுத்தர வயதைக் கடந்த பெண் ஒருவரிடம் உந்துருளியில் வந்த இருவர் முகவரியொன்றை விசாரிக்க முற்பட்டுள்ளனர். அப்போது அப் பெண் தனது கையை நீட்டி வழிகாட்டிய போது அவரது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர் கள்வர்கள். இறுதியாக கட்டைப் பறிச்சான் பகுதியில் கடைக்குப் பொருட்களை வாங்க வந்த பாவனையில் சங்கிலிக் களவில் ஈடுபட்ட இருவர்.

இந்த இறுதித் திருட்டைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு கடற் படையினர் கைதாகியுள்ளனர்.

பெண்களுக்கெதிரான வன்முறையொன்றின் வடிவமாகக் கிளர்ந்துள்ள இவ் விடயத்தில் கவனத்திற் கொள்ள வேண்டிய மற்றைய விடயம் இம்மூன்று கொள்ளைகளும் தமிழ்ப் பெண்களுக்கெதிராக நிகழத்தப் பட்டிருப்பதே. ஏனெனில் தமிழரின் கலாசார குறிகாட்டியொன்றாக தங்க நகைகள் இருப்பது தான் அதற்குக் காரணம். இக் கலாசாரக் குறிகாட்டியை மாற்ற வேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளதாகவே நிலைமைகள் எமக்குத் தெளிவுறுத்து கின்றன. இறுதிக் களவின் போது கள்வர்கள் கண்டு பிடிக்கப் பட்டிருப்பதால் இனிவரும் காலங்களில் அவர்கள் தம்மை இனங்காட்டிக் கொள்ள முயற்சிக் காமல் இருப்பர். அதையும் மீறி அவர்கள் இனங்கானப் பட்டால் அவ்வாறு இனங்கானுபவர்களை விட்டு விட்டுச் செல்வார்களா?

அத்துடன் எமது பெற்றோர்கள் குழந்தைகளின் கழுத்தில் தங்கச் சங்கிலிகளை அணிவதை விருப்பமாகக் கொண்டுள்ளனர். அவ்வாறு அணிவது சரியா? பிழையா என்பது அவரவர் விருப்பத்தைப் பெறுத்தது. ஆனால் அவ்வாறு அணிவது குழந்தையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகி விடுமல்லவா?

எனவே தங்கப் பவுணொன்றின் விலை ஐம்பதாயிரங்களைக் கடந்திருக்கும் இவ் வேளையில் அதனைப் பத்திரமாகப் பாதுகாப்பது தானே முக்கியம்..... அதனை அணிந்து உயிர்ப் பயத்தை நாமே உருவாக்கிக் கொள்ளுவானேன். போலிகள் நிறையவே உள்ளன. அணிந்து பார்ப்போமா..... -ஆசிரியர்-

# "லசந்தவைக் கொன்றது பொன்சேகாவே"


(உவிந்து குருகுலசூரிய)

லசந்தவைக் கொன்றது பொன்சேகாவே என சாதிபதி லசந்தவின் சகோதரருக்கு 3 தடவைகள் கூறியுள்ளார். சண்டேலீடர் பத்திரிகையின் தாபக ஆசிரியரும் பிரதம ஆசிரியருமான லசந்த விக்ரமதுங்கவைக் கொலை செய்தது அக்காலத்தில் இராணுவத் தளபதியாகவிருந்த சரத் பொன்சேகாவே என மகிந்த இராஜபக்ச , லசந்தவின் சகோதரரான லால் விக்ரமதுங்கவிற்கு மூன்று தடவைகள் கூறியதாக உயிர்ப்பயத்தால் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்து வாழும் உவிந்து குருகுலசூரிய எனும் பத்திரிகையாளர் வெளிப்படுத்தியுள்ளார்.

19.02.2013 அன்று லண்டனில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இவ்விடயத்தை வெளிப்படுத்தியிருந்ததுடன் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையர் நவநீதம் பிள்ளியிடம் இவ்விடயம் தொடர்பாக அவர் லால் விக்ரமதுங்கவின் கைப்பட எழுதிய கடித நகலொன்றையும் கையளித்துள்ளார்.

"லண்டன் ஸ்கூல் ஒவ் எக்னமிக்ஸ்" இனால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் நவநீதம்பிள்ளை அவர்களின் பேச்சைத் தொடர்ந்து பேச அழைக்கப்பட்ட உவிந்து இவ்விடயங்களை வெளிப்படுத்தியிருந்தார். அத்துடன் லசந்த விக்ரமசிங்கவின் மரணச்சடங்கின் போது ரணில் விக்ரமசிங்க கூறியது என்ன என்பதை உவிந்து வெளிப்படுத்தியிருந்தார்.

அக்கூற்றானது "கொலைஞர் நால்வரும் இராணுவத்தினரே! எனினும் எனது எண்ணப்படி சரத் பொன்சேகா அதற்கு காரணமானவரானால் அவருக்கு மேல் நிலையிலுள்ள இருவராலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

பொன்சேகாவிற்கு மேலுள்ள இருவரும் முறையே பாதுகாப்பு அமைச்சரான சனாதிபதியும், அப்பாதுகாப்பமைச்சுச் செயலாளரான சனாதிபதியின் சகோதரருமே. லசந்தவைக் கொல்வது பொன்சேகாவின் தனி முடிவல்ல. பொன்சேகா கொலைஞர்களை பிரயோகித்திருக்கலாம். ஆனால் உயர் நிலையிலுள்ள ஊடகவியவாளரைக் கொல்வது ஒரு அரசியல் தீர்மானமே" என்று ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார்.


லசந்த மரணிக்கச் சற்று நேரத்திற்கு முன்

## சமாதான நீதவான்களுக்கு பணம் வழங்காதீர்கள்.

சத்தியக்கடதாசி மற்றும் ஆவணங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சமாதான நீதவான்களுக்கு பொதுமக்கள் யாரும் பணம் வழங்க வேண்டாம் என நீதி அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது. சமாதான நீதவான் பதவி இலவசமான சேவை சம்பந்தமானது. ஆவனங்களை உறுதிப்படுத்த பொதுமக்களிடம் பணம் வசூலிக்க அவர்களுக்கு எவ்வித அதிகாரம் இல்லை எனவும். சேவைகளுக்காக பணம் அறவிடும் சமாதான நீதவான்கள் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, பொலீஸ், நீதி அமைச்சு என்பனவற்றுக்கு அறியப்படுத்துமாறும் நீதி அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதேவேளை பொதுமக்களிடமிருந்து பணம் அறவிட்ட சமாதான நீதவான்கள் பற்றி கிடைத்த தகவல்களுக்கு அமைவாக அவர்களின் பதவிகளை இரத்துச் செய்ய நீதி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பொதுபல சேனாவுக்கு எதிராக தீர்மானம்

**பொது** பல சேனா அமைப்பினால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போராட்டங்களைக் கண்டித்து அவ்வமைப்புக்கு எதிராக கிழக்கு மாகாணசபையில் கண்டனத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாகாண சபையின் மாதாந்த அமர்வு செவ்வாய்க்கிழமை சபையின் தவிசாளர் ஆரியபதி கலபதி தலைமையில் நடைபெற்றது. அமர்வில் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் குழு நிலைத் தலைவருமான ஏ.எஸ். ஜெமீலினால் இந்த கண்டனப் பிரேரணை, சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போது ஹலால் விவகாரம் தொடர்பில் ஆளுந்தரப்பு சிங்கள மற்றும்' முஸ்லிம் உறுப்பினர்களிடையே பலத்த வாக்குவாதம் இடம்பெற்றது இதன்போது உரையாற்றிய சபை உறுப்பினர் எம்.எஸ்.அமீர் அலி கூறுகையில், "ஜமியத்துல் உலமா என்பது எங்களுடைய மார்க்க அறிஞர்கள் ஒன்றுகூடி இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து முஸ்லிம் மக்களை தெளிவுபடுத்துவதாகும். சிங்களர்களுக்கு அஸ்கிரிய மல்வத்துசங்காய போன்று தான் முஸ்லிம் மக்களுக்கு ஜம்மியத்துல் உலமாவாகும். முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் விட்டுக்கொடுப்புடன் வாழ்கின்ற சமூகம் மேலும் பொது பலசேனா என்ற அமைப்பு முஸ்லிம்கள் மீது பல குற்றச்சாட்டுக்களை வைக்கின்றது. என்று கூறினார்

## ஆயிரம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் 1000 பேருக்கு டிப்ளோமா பயிற்சியை வழங்க ரொட்டறிக் கழகம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

பதினான்கு பயிற்சி நிலையங்களில் பத்து மாதங்கள் வரையில் நடைபெறவுள்ள இப்பயிற்சிக்காக 16.5 மில்லியன் ரூபாய்கள் ஒக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் தொடக்க நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை திருக்கோணமலை ரொட்டறிக் கழகத்தில் இடம்பெற்றுள்ளது.

## நூற்றி இருபது அபிவிருத்தி அலுவலர்க்கு அறிமுகப் பயிற்சி

**கி**ழக்கு மாகாண சபைக்கென தெரிவுசெய்யப்பட்டு நியமனம் பெற்ற 120 அபிவிருத்தி அலுவலர்க்கும் அறிமுகப்பயிற்சியைக் கிழக்கு மாகாண சபை அரும்பித்துள்ளது. கடந்த 14ம் திகதி ஆரம்பமான இவ் அறிமுக்ப் பயிற்சியானது கிழக்கின் பிரதம செயலாளர் D.M.S. அபயகுணவர்த்தனவால் ஆரம்பிக்கப்பட்டது.





## உதயமானது உள்ளூராட்சி சபைத் தலைவர்களின் அமைப்பு

உள்ளூராட்சி சபைகளில் அரசியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் ஏற்படும் பிரச்சினைகளை தீர்வுகாணும் முகமாக திருக்கோணமலை மாவட்ட உள்ளூராட்சி சபைத் தலைவர்களின் அமைப்பொன்றினை உருவாக்கி உள்ளனர். இதன் தலைவராக கிண்ணியா நகரசபை தலைவர் டாக்டர். எம்.எம். ஹில்மி தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த வியாழக்கிழமை கிண்ணியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருக்கோணமலை, கிண்ணியா, தம்பலகாமம், மூதூர், கந்தளாய், குச்சவெளி, மொறவெவ, வெருகல் சேருவில, பதவிசிரிபுற, கோமரங்கடவெல, ஈச்சலம்பற்று ஆகிய உள்றுராட்சி மன்றத்தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையை காட்டி பூதம் விளுங்கின கதை

மூன்று வாரமாக வரலாற்றைப் பேசி தற்போதுதான் ஆழ்ந்த பெருமூச்சை விட்டிருப்பார் போலும் திரு. மைக்கல் கொலின். இவ் ஆசுவாச பெருமூச்சுடனே எனது நெஞ்சுதளுவிய நன்றிகளையும் இனிச் சேர்த்துச் சுவாசிப்பதற்காய் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கட்டுரையில் நான் தவறவிட்ட விடயங்களை எனக்குச் சுட்டிக்-காட்டியது மட்டுமன்றி ஊரறியவும் செய்திருக்கிறார். "மிக்க நன்றி" ஆனால் ஒரு விடயம் மட்டும் சந்தேகமாகத்தான் இருக்கிறது. நான் தவறவிட்ட திருக்கோணமலையின் கலையிலக்கிய வரலாறுகளை பேச வந்த கொலின் அவர்கள் கட்டுரையில் குறிப்பிட்ட ஏனைய இலக்கிய செயற்பாடுகளுடனும் செயற்-பாட்டாளர்களுடனும் ஒப்பிட்டு நோக்குமிடத்து தன்னைப்பற்றியும் தன் இலக்கிய செயற்பாடுகள் பற்றியும் சரமாரியாக பொழிந்திருக்கிறார். (வரலாற்றை பேசுதல் கட்டுரையை உற்று வாசித்தவர்கள் உணர்வார்கள்) அவரது மொழியிலே சொன்னால் பூபாளம் பாடியிருக்கிறார். இத்தகைய கட்டத்தில் தனது வரலாற்றை பேச முனைந்தாரா? அல்லது எனது கட்டுரையில் நான் தவறவிட்ட திருக்கோணமலையின் கலை இலக்கிய வரலாற்றை பேச முனைந்தாரா? என்பதே என(ம)து சந்தேகமாயிருக்கிறது. (உங்களுக்கும் இருந்திருக்கும்தானே)

இந்நிலையில் தனது பக்கம் மட்டும் சற்று அதிகமாய் வரலாற்றைப் பேசிய திரு. வி. மைக்கல் கொலின் அவர்கள் அக்கட்டுரைக்கு "வரலாற்றை பேசுதல்" என்ற தலைப்பை இட்டு ஆங்காங்கே ஏனைய கலையிலக்கிய பதிவுகளை செய்துவிட்டு தான் சார்ந்த கலையிலக்கிய பதிவுகளை உயர்த்திக்காட்டிய நிலையில் அக்கட்டுரைக்கு வரலாற்றைப் பேசுதல் என்ற தலைப்பு எப்படிச் சாத்தியாமாய் இருக்கும். ஒருவேளை இதுதான் "பிள்ளைய காட்டி பூதம் விளுங்கின கதையா இருக்குமோ!" இதில் இவர் யாருடைய வரலாற்றைப் பேச வந்தார் அல்லது முனைந்தார் என்பது இன்று ஊரறிந்த விடயம். அவரது இலக்கிய செயற்பாடுகளுக்கு உரமூட்டிய அக்கட்டுரைக்கு வேறு தலைப்பு கிடைக்காதுபோன காரணமா? அல்லது

> "இக்கட்டுரை திரு. வி. மைக்கல் கொலின் அவர்களின் "வரலாற்றைப் பற்றிப்பேசுதல்" எனும் கட்டுரையின் எதிர்வினையாகும்."

வரலாற்றுக்குள் தான் நிற்பதாக காட்டிக்கொள்ள வேண்டிய தேவையா? எது கொலின் அவர்களை வழிநடத்தியது என்று தெரியவில்லை. இந்த இடத்தில் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் நான் ஏலவே குறிப்பிட்ட

"யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்
வானோர்க்குயர்ந்த உலகம் புகும்"

எனும் வள்ளுவன் மொழியை மீண்டுரைத்தல் சரியாய் இருக்கும் என்று கருதுகிறேன்.

நெடுங்கால பழமை மிக்க திருக்கோணமலையின் கலையிலக்கிய வரலாற்றை நூற்று இருபத்தியாறு ஆண்டுகளுக்குள் நான் மட்டுப்படுத்தி-யிருப்பதாக கூறும் மைக்கல் கொலின் அவர்கள் அக்கட்டுரையில் 1887இல் ஆதாரபூர்வமாக அச்சுவடிவில் கிடைத்த தட்ஷிணகைலாய புராணத்தோடு திருக்கோணமலை கலையிலக்கிய வரலாறு தொடங்கப்பட்டதாலேயே 126வது ஆண்டு என அக்கட்டுரையில் கொள்ளப்பட்டுள்ளது. எனக் குறிப்பிடப்பட்டதை உணர்ந்தாரா? தெரியவில்லை.

திருக்கோணமலை இலக்கிய வரலாறு நெடுங்கால பழமை வாய்ந்தது என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால் வரலாற்றை பொறுத்தவரை 1887 இல் கிடைத்த தட்ஷிண கைலாய புராணமே எழுத்துமூலமான முதல் ஆதார நூல் ஆகும். இதனடிப்படையிலேயே அந்த 126வது ஆண்டென்பது குறிப்பிடப்-பட்டது. இது தொடர்பாக பிரிதொரு கட்டுரையில் விசாலிக்க நினைக்கும் திரு. வி. மைக்கல் கொலின். சில வேளைகளில் திருமலை நவம் அவர்கள் எழுதிய திருக்கோணமலை கலையிலக்கிய வரலாறு எனும் நூலிற்கு மிகைப்பட்ட தகவல்களை எமக்காக வழங்கவும் கூடுமென்று எதிர்பார்க்கிறேன். (அதிலாவது வரலாற்றை பேச முனையும் வேளையில் "பூதம் விளுங்கின கதையை" தவிர்ப்பார் போலும்) அவ்வாறு தவிர்க்காது போனாலும் பரவாயில்லை...

**"பொன்னின் குடம் உடைந்தால்**
**பொன்னாகும் - என்னாகும்**
**மண்ணின் குடம்**
**உடைந்தக்கால்?"**

மைக்கல் கொலின் சிறந்த இலக்கிய செயற்பாட்டாளர், கவிஞர் இன்னும் சொல்லப்போனால் காலத்துக்குக்-காலம் புதிது புதிதாய் சஞ்சிகைகளை ஆரம்பிக்கும் அசாத்திய திறமை படைத்தவர். ஆனால் இருபத்தி எட்டு பந்திகள் நிறைந்த வரலாற்றைப் பேசுதல் எனும் அவரது கட்டுரையில் பதினான்கு பந்திகள் தன்னைப்பற்றி தானே எழுதும் அளவுக்கு பிரமாண்டப் பேனாக்காரர் என்பது இப்பொழுது-தான் புரிகிறது. அவரது தாகம் கலையிலக்கிய வட்டம் உட்பட திருகோணமலை கலைவட்டம், கீழைத்தென்றல் கலாமன்றம், வள்ளுவர் சபை, திருவள்ளுவர் கழகம் என்பன பற்றி எனது கட்டுரையில் குறிப்பிட தவறியமை உண்மைதான். ஆனால் நடுநிலை-யான நிலையில் நின்று அவற்றை உணர்த்த விரும்பியிராத கொலின் தனக்கு மட்டும் தடால் புடால் பூபாளம் பாடியது ஒரு வேளை தாகம் கலையிலக்கிய வட்டம் மாத்திரம்தான் அவர் குறிப்பிடுகின்ற காலங்களில் திருக்கோணமலை கலையிலக்கிய வளர்ச்சியின் ஏறுதடியாய் இருந்தது என்பதை வரலாற்றில் பதிக்க முனைந்த முயற்சியா? என்ற சந்தேகங்களை எழுப்புகின்றது.

செயற்பாட்டாளன் ஒருவன் தான் செய்து முடித்த விடயங்களால், அவற்றின் சுவடுகளால் வரலாற்றால் பேசப்படுவானே அன்றி தனது வரலாறு பற்றி தானே பேசமாட்டான். அவ்வாறு பேசமுனைதலை வரலாற்றை பேசுதல் என்பதற்கு மாறாக சுயதம்பட்டம் அடித்தல் என்றுதான் கூறவேண்டியிருக்கும். சிலவேளைகளில் நிலையில்லாத உருமாறிகளை வரலாறுகள் ஞாபகத்தில் கொள்வதில்லைதான்.

*மீண்டுரைக்கும்*
*தில்லைநாதன் பவித்ரன்*

---

# - பாவேந்தர் - பாரதிதாசன்

தமிழாசிரியராக பணியாற்றிய பாரதிதாசன் சுப்பிரமணிய பாரதியார் மீது பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார். பாரதிதாசன் தம் எழுச்சி மிக்க எழுத்தால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் பரவலாக அழைக்கப்படுகிறார். இவர் குயில் என்னும் ஒரு திங்களிதழ் நடாத்தி வந்தார்.

புரட்சிக்கவி பரதிதாசன் அவர்கள் 29.08.1891 இல் புதுவையில் பெரிய வணிகராயிருந்த கனகசபை முதலியார், இலக்குமி அம்மாள் ஆகியோருக்கு பிறந்தார். கவிஞரின் இயற்பெயர் சுப்புரத்தினம். 1920ம் ஆண்டில் பழனி அம்மையார் என்பவரை மணந்து கொண்டார். இவர் சிறுவயதிலேயே பிரெஞ்சு மொழிப் பள்ளியில் பயின்றார். ஆயினும் தமிழ்ப்பள்ளியிலே பயின்ற காலமே கூடியது. தமது பதினாறாம் வயதிலேயே கல்வே கல்லூரியில் தமிழ்ப் புலமைத் தேர்வு கருதிப் புகுந்தார். தமிழ் மொழிப் பற்றும் முயற்சியால் தமிழறிவும் நிறைந்தவராதலின் 2 ஆண்டில் கல்லூரியிலேயே முதலாவதாகத் தேர்வுற்றார். 18 வயதிலே அவரின் சிறப்புணர்ந்த அரசியலாளர் அவரை அரசினார் கல்லூரித் தமிழாசிரிய-ராக்கினார். இசையுணர்வும் நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவில் காட்சி அளிக்கத் தலைப்பட்டன. சிறு வயதிலேயே சிறு சிறு பாடல்களை அழகாகச் சுவையுடன் எழுதித் தமது தோழர்கட்கும் பாடிக்காட்டுவார்.

நண்பர் ஒருவனின் திருமணத்தில் விருந்துக்குப் பின் பாரதியாரின் நாட்டுப்பாடலைப் பாடினார்.

பாரதியாரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார். ஆனால் கவிஞருக்கு அது தெரியாது. அப்பாடலே அவரை பாரதியாருக்கு அறிமுகம் செய்தது. தனது நண்பர்களுக்கு முன்னால் பாடு என்று கூற எமது கவிஞர் "எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்று ஆரம்பித்து இரண்டு பாடலை பாடினார்.

> **"இவரின் முதற்பாடல் பாரதியாராலேயே சிறீ சுப்பிரமணிய கவிதா மண்டலத்தைச் சார்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது என்றெழுதப்பட்டு சுதேசமித்திரன் இதழுக்கு அனுப்பப்பட்டது."**

புதுவையிலிருந்து வெளியான தமிழ் ஏடுகளில் கண்டமுதுவோன், கிறுக்கன், கிண்டல்க்காரன் பாரதிதாசன் என பல புனைப் பெயர்களில் எழுதி வந்தார்.

பிரபல எழுத்தாளரும் திரைப்படக் கதாசிரியரும் பெரும் கவிஞருமான பாரதிதாசன் அரசியலிலும் Digitized by Noolaham Foundation. கொண்டார். noolaham.org | aavanaham.org உறுப்பினராக 1954ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1946 ஜூலை 29 இல் அறிஞர் அண்ணா அவர்களால் கவிஞர் புரச்சிக்கவி என்று பாராட்டப்பட்டு ரூ 25000 பொற்காசும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

பாரதிதாசன் அவர்கள் நகைச்சுவை நிரம்பிய கவிஞருடைய படைப்பான பிசிராந்தையார் என்ற நாடக நூலுக்கு 1970 இல் சாகித்திய அகடமியின் விருது கிடைத்தது.

இவருடைய படைப்புக்கள் 1990 இல் பொதுவுடமை-யாக்கப்பட்டது



*மறைவு:*

கவிஞர் பாரதிதாசன் 1964.04.21 இல் இயற்கை எய்தினார்.

இவருக்கு மலர் மன்னன் என்ற மகனும் மூன்று பெண் குழந்தைகளும் உள்ளனர்.

**ஆக்கம்:** **ரக்ஷிகா ஸ்ரீதர்**
தரம் - 09
திருகோணமலை விவேகானந்தா கல்லூரி.

---

## பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் மிதிவண்டிகளும்

கடந்த ஆண்டு இடம்பெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தி/கோணலிங்க வித்தியாலய மாணவர்களுக்கு சான்றிதழ்களும், மிதிவண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பாடசாலை அதிபர் திரு. க. யோகானந்தன், திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. விஜேந்திரன், உதவிக்கல்விப் பணிப்பாளர்களான திரு. சிவநிர்த்தானந்தா, திரு. கணேசலிங்கம் ஆகிய அதிதிகள் கலந்துகொண்டு சிறப்பித்ததோடு சித்தியெய்திய மூன்று மாணவர்-களுக்கான சான்றிதழ்களையும், மிதிவண்டிகளையும் வழங்கி வைத்தனர்.





இனி...

வைத்திலிங்கம்பிள்ளை வீட்டு முற்றத்தில் பார்த்துக்கொண்டு நின்றார். வழமையாக அவள் இவ்வளவு தாமதித்து வந்ததில்லை. அவளைப் பற்றி அவருக்குக் கலக்கம் கிடையவே கிடையாது. தாயில்லாப் பிள்ளை என்று அவளைப் பொத்தி வளர்த்து, அவள் பயந்தாங்கொள்ளியாகிவிடக்கூடாது, என்று, துணிச்சலாக உலகை எதிர்நோக்குமளவுக்கு வளர்த்துவிட்டவர் அவர். ஆனாலும் ஊர் என்று ஒன்று இருக்கிறதே!

வேகமாக வந்தவள் தந்தை முற்றத்தில் நிற்கக் கண்டாள். தனக்காக அவர் பார்த்து நிற்பது புரிந்தது.

என்னம்மா எங்கே போயிருந்தாய்? இன்னும் சற்றே பொழுது தாமதித்திருந்தால் உன்னைத் தேடி எங்கெல்லாம் அலைந்திருப்பேனோ? என்றார் பிள்ளை ஆதங்கத்துடன்.

என்னப்பாநீங்க! உங்களுக்கு என்னைப் பற்றிப் பயம் வரலாமா? இன்றைக்கு பாடிக்காட்டிய இராகத்தை தனிமையில் பாடிப் பழகிச், சரிபார்க்க நீங்கள் முன்னம் அழைத்துப் போய் காட்டியிருந்த குடமுருட்டியாறு மணல் பரப்புக்குத்தான் போயிருந்தேன். என்னை குடமுருட்டியாறு ஒன்றும் உருட்டிக் கொண்டு போய்விடாது அப்பா.

என்ன! இராகத்தைப் பாடிச் சரிபார்த்தாயா...? அதற்காக, மணல் பரப்புக்கா போனாய்? ... இராகம் சரி வந்ததா? எங்கே பாடு பார்க்கலாம். என்றார் அவள் தந்தை.

அவ்வளவுதான்! அடுத்த கணமே தனது குயில் குரலில் தந்தையின் நாதஸ்வர சுளிவு நெளிவுகளுடன் தனக்கேயுரிய லாவகத்துடன் கரகரப்பிரியா இராகத்தைப் பாட ஆரம்பித்து தொடர்ந்தாள். தாம் பாடிக்காட்டியதிலும் மேலாக மகள் படிப்படியாக இராகத்தை உச்சஸ்தாயியிக்கு ஏற்றிச் செல்வதையும், அதற்கு இசைவாக அவளின் இனிய குரல் தடங்கலின்றி இராக ஆலாபனைக்கு துணை போவதையும் கண்டு பெருமைப்பட்டார்.

அதுமட்டுமல்லாது, அவளது இராக ஆலாபனையிலும், பல்லவி எடுப்பிலும், தான் நாதஸ்வரத்தில் கையாளும் பாணி மிளிர்வதையும் கண்டு குளிர்ந்துபோன பிரபல நாதஸ்வர வித்துவான் வைத்திலிங்கம் பிள்ளை, மீன் குஞ்சுக்கு நீந்தவும் கற்றுக் கொடுக்க வேண்டுமா என்று தனக்குள்

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 4

## வரலாற்று நாவல்

மகிழ்ந்ததுடன் நில்லாது வாய்விட்டு, ஆகா ... அபூர்வம், அபூர்வம் என்று மகளைப் பாராட்டவும் செய்தார்.

சிறு பராயத்திலே தகப்பனை இழந்துவிட்டார் வைத்திலிங்கம் பிள்ளை. அவர் தாய்மாமன் பரசுராமன் அவரை மதுரைக்கு அழைத்துச் சென்று நாதஸ்வர மாமேதை பொன்னுச்சாமி பிள்ளையிடம், பையனின் ஆதரவற்றநிலையைக் கூறி, குரு - சீடன் முறையில் நாதஸ்வரம் கற்க ஏற்பாடு செய்திருந்தார். வைத்திலிங்கம், பக்தியுடன் குருவுக்கும், அவர் பத்தினிக்கும் அவர்களது மனம்குளிர சிருஷைகள், தொண்டுகள் செய்து அவர்களின் பரிபூரண ஆசியுடன் நாதஸ்வரம் கற்று வித்துவானாக ஊர் திரும்பினார்.

ஊர் திரும்பிய அவருக்கு அவரது திறமை, ஈழத்தின் தம்பலகாமத்தில் கோணேஸ்வரர் ஆலயத்தில் சேவகம் புரியும் வாய்ப்பைத் தேடித்தந்தது. நாளடைவில் அவருக்கு நாட்டு வைத்தியரின் அறிமுகம் கிட்டியது. அந்த நாட்களில் பெரும்பாலும் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கலைகளைக் கற்றுத் தேர்ந்திருப்பது என்பது சாதாரணம். வைத்தியரும் இதற்கு விதிவிலக்கில்லை. அவருக்கு கர்நாடக இசை கைவந்த கலை. நன்கு பாடுவார். அவரது திறமை வைத்திலிங்கத்தை கவர்ந்தது. அவர் வீட்டுக்குப் போய் இருவருமாக சங்கீதத்தை உருப்போடுவதை வழக்கமாக்கிக் கொண்டனர்.

வைத்தியருக்கு ஹம்சாம்பிகா என்றொரு மகள். வைத்திலிங்கம் பிள்ளையின் ஆற்றல்களால் கவரப்பட்டு, அவரைக் காதலித்து மணந்து கொண்டாள். ஊரெல்லாம் தம்பதியை மெச்சிப் போற்றுமளவுக்கு அவர்களது வாழ்க்கை இருந்தது. இதோ வள்ளுவனும் வாசுகியும் என்றே சொல்வது வழக்கமாக இருந்தது. தம்பலகாமம் கோணேஸ்வரர் ஆலயத்தில் ஆனி உத்திர தினத்தில் தொடங்கும் உற்சவ விழாக்களுக்கு உபயக்காரர்கள் போட்டி மனப்பான்மையுடன் இந்தியாவினின்றும், இலங்கையின் யாழ்ப்பாணம் போன்ற பல இடங்களிலிருந்தும் நாதஸ்வரம், பாட்டு, சங்கீதக் கச்சேரி என்று நிகழ்ச்சிகளை ஏற்பாடு பண்ணித் தூள் கிளப்பிவிடுவார்கள். சுவாமி எழுந்தருளலுக்கு முன் இரவு பதினொரு மணிக்கு அப்பாலும் நாதஸ்வரக் கச்சேரிகள் தொடரும். அவ்வாறான கச்சேரிகளில் கலந்து கொண்ட வித்துவான்கள் எவரிடமும் தோல்வி காணாத ஒரு வித்துவானாக வைத்திலிங்கம் பிள்ளை புகழ்பரப்பிக் கொண்டிருந்தார். என் வெற்றிக்கெல்லாம் என் கம்சாதான் காரணம் என்று மனைவியின் புகழ்பாடுவார் வைத்திலிங்கம்பிள்ளை.

சென்ற வாரம்...

**இளம் மங்கையர்களின் நெஞ்சங்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய சுந்தர புருஷன் என்பதில் ஐயமேயில்லை என்று, அவனது ஆனந்த நினைவை நெஞ்சில் சுமந்து கொண்டு நடையை எட்டிப் போட்டாள்.**

அவரது வாழ்க்கையின் எதிர்பாராத இழப்பு மின்னாமல் முழங்காமல் அவரைத் தேடிவந்தது. இரண்டொரு நாட்கள்தான் சோர்வாகக் காணப்பட்ட அவரது மனைவி, தந்தை கற்றுக் கொடுத்திருந்த அறிவைக் கொண்டு கசாயம் அது இது என்று குடித்துப் பார்த்து சமாளிக்க முயற்சித்தாள். ஒரு நாள் நெஞ்சடைப்பில் போயே விட்டாள். இடிந்து போனார் வைத்திலிங்கம் பிள்ளை. மனைவியின் பிரிவு அவரை பைத்தியமாக மாற்றியடித்துவிடும்போல் இருந்தது. அவரது நிலை கண்டு ஊரே கலங்கியது. நாதஸ்வரத்தை கிடப்பில் போட்டுவிட்டார். அவருக்குப் பைத்தியம் பிடிக்காமல் தவிர்த்தது அவரது கடைசி மகளான ரங்கநாயகிதான். தந்தைக்கு அப்படியேதும் அவல நிலை வராது தடுக்கும் ஆதாரமாக அவள் இருந்தாள். காலம் அவரை மாற்றும் என்று அவள் நம்பினாள். நாளானபோது அவர் கோயில் சேவையைச் செய்ய தனது மகன் கணபதிப்பிள்ளையை ஏற்பாடு பண்ணிக் கொடுத்துவிட்டு, கடைக்குட்டி ரங்கநாயகியுடன் ஒன்றிக் கொண்டார். நாதஸ்வரத்தை உயிரிலும் மேலாக மதித்தவர் அவர். இப்போதோவென்றால் அதை ஏறிட்டுப் பார்ப்பதே சிரமமாக இருந்தது.

தொடரும்...




# சோழரின் திருமலை மீதான ஆக்கிரமிப்பும், அதன் தாக்கமும்...

விக்கிரமபாகுவின் படைபெருக்கும் நடவடிக்கை எதிர்பார்த்ததைவிட மிகவும் நீண்டகாலம் எடுத்து சுமார் எட்டு வருடங்கள் தொடர்ந்தது. ஆயினும் பெருக்கிய படைமூலம் சோழர்மேல் படையெடுக்க முன்னர் விக்கிரமபாகு நோய்வாய்ப்பட்டு தெய்வேந்திர முனையில் மரணமடைந்தான்.

பொலனறுவை மீதான விஜயபாகுவின் மும்முனைத் தாக்குதல் கி.பி 1070 வரை இலங்கையில் நீடித்த சோழர் ஆட்சி பல்வேறு காரணங்களால் வீழ்ச்சியுற ஆரம்பித்தது. முதலாம் விக்கிரமபாகுவிற்கு நேரடி வாரிசுகள் இல்லாத காரணத்தினால் அரசாட்சிக்கான போட்டி ருகுணு இராச்சியத்தில் அரங்கேறியது. இந்த நிலமையை சோழர்கள் நன்கு பயன்படுத்திக்கொண்டனர். பதவிக்குப் போட்டியிட்ட ஐந்து இளவரசர்களில் மூன்று இளவரசர்கள் சோழர்-படைகளினால் வெற்றிகரமாகக் கொலைசெய்யப்பட்டனர்.

கி.பி 1055 இல் முதலாம் விஜயபாகு எனும் அரசன் பதவியேற்றுக்-கொண்டான். பதவி ஏற்ற விஜயபாகு சோழர்களின் இலங்கைத் தலைநகரமான பொலநறுவையைக் கைப்பற்றத் திட்டம் தீட்டினான். கி.பி 1066 இல் தனது முதலாவது தாக்குதலை பொலன்னறுவை மேல் நடத்தினான்.

இதன் போது பொலன்நறுவை நகரத்தை வெற்றிகரமாகக் கைப்பற்றினாலும் சிறிது நாட்களில் தென்னிந்திய சோழ சாம்ராச்சியத்தில் இருந்து கிடைத்த மேலதிகப் படையுதவிகாரணமாக சோழர் மீளவும் விஜயபாகுவை விரட்டித் தமது தலைநகரத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். 1069-1070 காலப்பகுதியில் சோழ இராச்சியத்தில் உள்நாட்டு யுத்தம் உருவானது. இதன் காரணமாக சோழ அரசிற்கு இலங்கைபற்றி கவலைப்படும் நிலையில் இருக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய விஜயபாகு தனது இரண்டாவது தாக்குதலைப் பொலன்னறுவை மீது ஏவினான். மூன்று முனைகளில் படைகளை ஏவிய விஜயபாகு மேற்குப் பக்கமாக ஒரு படையணியை அனுப்பி மாந்தை மூலம் சோழர் உதவிப்படை அனுப்பினால் அதை எதிர்கொள்ள தயாரானான். அதேவேளை மேற்கு, கிழக்கு பகுதிகளால் இரண்டு படையணிகளையும் நேரடியாக தெற்கிலிருந்து தனது தலைமையில் பிரதான படையணியையும் கொண்டு பொலனறுவையை முற்றுகையிட்டான். சுமார் 17 மாதங்கள் தொடர்ந்த முற்றுகை விஜயபாகுவிற்கு வெற்றியாக அமைந்தது. கி.பி 1070 இல் பொலன்னறுவையைத் தலைநகரமாகக் கொண்டு விஜயபாகு இலங்கையின் மன்னனாக முடி சூடிக்கொண்டான்.

17 வருடங்கள் தொடர்ந்த இடைவிடாத தாக்குதல் மூலம் சோழர்படைகளை இலங்கையில் இருந்து வெளியேற்றியதுடன் இலங்கையை ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்தான். அண்ணளவாக ஒரு நூற்றாண்டு காலத்தின் பின்னர் அடன்காப்பற்றுகளுடன் இணைந்து இலங்கையை ஒரு குடையின் கீழ் சேர்த்த பெருமை இவனைச் சாரும். இவ்வாறு சோழர் ஆட்சி இலங்கையில் முடிவடைந்தது.

### திருகோணமலையில் சோழர்களால் ஏற்பட்ட மாற்றங்கள்

நம் முப்பாட்டன்களின் செல்வத்தையும் உழைப்பையும் சுரண்ட வந்த சோழர்களுக்கு திருமலை தோதான இடமாகிப் போனது. இன்றுவரை திருகோணமலை மீது ஆக்கிரமிப்பாளர் அனைவரும் அதீதமான அக்கறை கொள்வதற்கு முக்கிய காரணம், திருகோணமலையின் புவியியல் சார் பொருளாதாரச் சிறப்புக்களே.

திருகோணமலை அருமையான ஒரு இயற்கைத்துறைமுகத்தைக் கொண்டது, பாரிய கப்பல்கள் கூட கரையை அன்மித்து வரக்கூடிய வெட்டுண்ட கடற்கரை, வங்காள விரிகுடா நோக்கி நுழைமுகம் கொண்ட இயற்கைத் துறைமுகமும், அதனை அண்மித்து இருக்கும் கழிமுகங்கள், இவை அனைத்தும் சாதரணமான




நோக்கர்களுக்கு பெரிதாகத் தோன்றாமலிருக்கலாம், ஆனால் இராணுவச் செயற்பாட்டாளர்களுக்கு அது ஒரு மிகுகொடை..இதை விட கடல் வளம், அதிலும் குறிப்பாக மகாவலியின் நன்னீரும், கொட்டியாரக்குடாக் கடலின் உவர் நீரும் கலக்குமிடத்தில் கிடைக்கக் கூடிய சிறப்பான மீன்வளமும், இருபோக விளைச்சல் தரக்கூடிய வயல்நிலங்கள், பாரிய மரங்கள் கொண்ட வனவளம், என்பனவெல்லாம் பொருளியல் நோக்கர்களின் கவனத்தையீர்க்கும் என்பதில் ஐயமில்லை.இப்படி இருக்கையில் சோழர்களையும் ஈர்க்காமல் இருக்குமா என்ன?

ராஜராஜ சோழனின் படைகள் அவனது மகனாகிய ராஜேந்திர சோழனின் தலைமையில் இலங்கை மாதோட்ட நகரத்தில் காலூன்றி திருமலையுடன் சேர்த்து இலங்கையின் கைப்பற்றி.. அதற்கு மும்முடிச் சோழ மண்டலம் என்று பெயரிட்டு.. ராஜராஜ சோழன் நடத்திய அராஜக ஆட்சியை பற்றி அறிந்து கொள்வதற்கு முன்னர்.. எப்படியான ஒரு சூழ்நிலையில் அவன் திருமலையை கைப்பற்றினான் என்பதை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.. அதற்காக அன்றைய காலகட்டத்தில் நடைபெற்ற இந்த சோழ ஆக்கிரமிப்பின்போது அங்கே சுதந்திரமாக ஆண்டு கொண்டிருந்த தமிழ் மன்னர்களின் ஆட்சிமுறை பற்றியும்.. மற்றும் அங்கு வாழ்ந்து கொண்டிருந்த தமிழ் சிங்கள மக்களின் நல்லுறவு பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகிறது. *(இன்னும் நடுவோம்)*

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**

**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**

**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வலம்

## வெனிசுலா ஜனாதிபதி தாயகம் திரும்பியுள்ளார்

கியூபா நாட்டில் இரண்டு மாதங்களாக, புற்று நோய்க்காக சிகிச்சை பெற்ற வெனிசுலா ஜனாதிபதி, ஹுகோ சாவிஸ் நேற்று தாயகம் திரும்பியுள்ளார். புற்றுநோயால் அவதிப்பட்டு வந்த சாவேஸுக்கு கடந்த ஆண்டு அறுவை சிகிச்சை நடந்தது. ஆனால் தற்போது அவருக்கு இடுப்பு பகுதியில் புற்றுநோய் பரவியதால் கியூபா சென்று சிகிச்சை பெற்றார். கியூபாவில் சாவேஸ் சிகிச்சை பெற்று வந்த காலத்தில் அவர் உடல் நிலை குறித்து ஏராளமான புரளிகள் பரவின. அவர் தாயகம் திரும்பியுள்ளதன் மூலம் இந்த சர்ச்சை முடிவுக்கு வந்துள்ளது.அவரது வருகையடுத்து மக்கள் அங்கு கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். பலர் தமது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.



## யப்பானுக்கும் அவுஸ்திரேலியாவிற்கும் இடையே முறுகல்

அந்தாட்டிக்கா கடலில் சுறாக்களின் வேட்டையாடுதல் தொடர்பாக எழுந்த முறுகல் நிலையில் யப்பானும் அவுஸ்திரேலியாவும் தம்மிடையே கடுமையான சொற்பிரயோகங்களில் ஈடுபட்டுள்ளன. அத்துடன் இரு நாடுகளும் சர்வதேச சட்ட நடவடிக்கைகள் ஈடுபடப்போவதாகவும் பரஸ்பரம் மிரட்டியுள்ளன. சுறா வேட்டைக்கென வந்த யப்பானிய கடற்கலங்கள் தமது மீன்பிடிக் கலங்களைத் தாக்கியுள்ளதாக அவுஸ்திரேலிய சுற்றுச்சூழல் அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும் யப்பான் இவ் விடயத்தை மறுதலையாகக் கூறியுள்ளது ஆஸியின் கடற்பிரதேசத்தின் கொள்ளைக்காரராக யப்பான் உருமாறி வருவதாகவும் அவ் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.




## சீனா "தகவல் திருட்டைச்" செய்யவில்லை.

வேர்ஜினியாவைத் தளமாகக் கொண்ட சைபர் பாதுகாப்பு நிறுவனமொன்று வெளியிட்டுள்ள 60 பக்க ஆய்வறிக்கையில் கணினித் தகவல் திருட்டில் சீன இராணுவத்திற்குள்ள பங்கு பற்றி தெளிவாக ஆதாரபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளது.

அதனைத் தொடர்ந்து உடனடியாக சீனா தனது கடும் மறுப்பறிக்கையை வெளியிட்டுள்ளது. 2006ம் ஆண்டிலிருந்து உலகின் மிகமுக்கிய 20 தொழிற்றைகளின் சேர்ந்த 141 நிறுவனங்களின் தகவல்களை எவ்வாறு சமயோசிதமாக சீனா திருடியுள்ளது என்பதை அவ்வறிக்கை பட்டியலிட்டுள்ளது. இத்தகவல் திருட்டில் ஈடுபட்ட அமைப்பானது தமக்கான சங்கேதப் பெயராக "கொமன்ட் குரூ" (Comment Crew) எனும் பெயருடன் நான்கு வலைப்பின்னல்கள் ஊடாக திருட்டை மேற்கொண்டுள்ளன. அவை சீன தலைநகர் ''சங்காய்''க்கு அருகிலிருந்து ஆரம்பிக்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் சில செயற்பாடுகள் சீனாவின் ''ட்டடோங்'' தெருவிலுள்ள கட்டடமொன்றிலிருந்து சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அக்கட்டிடம் சீன இராணுவத்தின் இரகசிய நிலையம் எனவும் அவ் அறிக்கை தெரிவித்துள்ளது.

இக்குற்றச்சாட்டு வெறுமனே இணைய நெறிமுறை முகவரியை (IP Address) மட்டும் அடிப்படையாய் கொண்டதே ஒழிய வேறு எந்த ஆதாரங்களையும் கொண்டதல்ல என சீன அரசு மறுத்துள்ளது. எவ்வித சட்ட ஆதாரமும் அங்கில்லை எனவும் சீனா கூறியுள்ளது.

## மலேசிய கிராமத்தை விட்டு நகர மறுக்கும் பிலிப்பைன்ஸ் ஆயுததாரிகள்

மலேசிய எல்லைக் கிராமமான "சாபா"வை விட்டு வெளியேற சுமார் நூறு பிலிப்பைன்ஸ் ஆயுததாரிகள் மறுத்துவருகின்றனர்.

மலேசியாவின் கிழக்குக் கரைக் கிராமமான "சாபா"வைச் சமாதானப் புரிந்துணர்வின் அடிப்படையில் மலேசியாவிடம் ஒப்படைத்துவிட்டு அங்கிருந்து தமது மக்களை வெளியேற்றி பிலிப்பைனஸின் கடற்கரைக் கிராமமான "சூலு"விற்கு அனுப்பும் முயற்சிகள் இதனால் தடைப்பட்டுள்ளன.

எனினும் இவ்வார இறுதியில் அவ் ஆயுததாரிகள் "சாபா"வை விட்டு வெளியேற்றப்படுவார்கள் என மலேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் அவ் ஆயுததாரிகள் எவ்வாறு வெளியேற்றப்படுவர் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

## ஒரே நேரத்தில் இணைந்த 3500 ஜோடிகள்

தென்கொரியாவில் உலக நாடுகளை சேர்ந்த 3500 ஜோடிகள் ஒரே நேரத்தில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர்.

தென்கொரியாவின் சர்ச்சைக்குரிய தேவாலய நிறுவுனரான மூனி என்பவரின் ஒருவருட நினைவு தினத்தை முன்னிட்டு இவ் பிரமாண்ட திருமணங்கள் "கேப்யோங்" இல் உள்ள உலக சமாதான மையத்தில் இடம்பெற்றது. 1997இல் 30000 பேர் இவ்வாறான ஒரே மேடையில் திருமண பந்தத்தில் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 06

பிரதீபா

1. பாடசாலை வேலைகளைப் பொறுப்புடனும், கவனத்துடனும் செய்கின்ற குரு. பிறர் துன்பம் அடையும் போது தன்னால் இயன்றவரை உதவிகளையும், தன்னிடமுள்ள பொருட்களையும் கொடுப்பான். இங்கு கூறப்பட்ட விளக்கத்தின் படி
   1. குரு இரக்கம் மிக்க மாணவன் எனக் கூறலாம்
   2. குரு பொறுப்புமிக்க மாணவன் எனக் கூறலாம்
   3. குரு வீரம் மிக்க மாணவன் எனக் கூறலாம்

2. ஒருவன் தனது புகைப்படத்தைக் காட்டி, கூறிய பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்று எது?
   1. இப்புகைப்படத்தில் இருப்பவர் எனது அக்காவின் மாமா ஆவார்.
   2. இப்புகைப்படத்தில் இருப்பவர் எனது அண்ணாவின் தம்பியாவார்
   3. இப்புகைப்படத்தில் இருப்பவர் எனது தம்பியின் அப்பா ஆவார்.

3. வானிலே இடி முழக்கமும், மின்னலும் ஏற்படுகின்றது. மின்னல் ஏற்பட்டு சிறிது நேரத்தின் பின்னரே இடி முழக்கத்தைக் கேட்பதாக உணர்கின்றோம். இதற்குக் காரணம் ஒளியும், ஒலியும் பயணம் செய்யும் வேகம் வித்தியாசமாக இருப்பதே ஆகும். இதன்படி சரியான கூற்று எது?
   1. மின்னல் முதலில் ஏற்படுகின்றது.
   2. இடிமுழக்கம் முதலில் ஏற்படுகின்றது.
   3. இடிமுழக்கமும், மின்னலும் ஒரே நேரத்தில் ஏற்படும்.

4. அமீன் தன்னுடைய விருப்பத்திற்கு வேலை செய்பவன். இதனை விளக்கும் கூற்று?
   1. அமீன் ஒரு பைத்தியக்காரன் 2. அமீன் ஒரு போக்கில் நடப்பவன்
   3. அமீன் ஒரு பண்டிதன்

5. ஒவ்வொரு வருடமும் மழைக்காலத்தில் டெங்கு நோய் பரவும் ஆபத்து அதிகரிக்கின்றது. இதற்குக் காரணம்?
   1. மழைக்காலத்தில் தேங்கியுள்ள நீரில் நுளம்புகள் மிக விரைவாகப் பெருகுகின்றமை.
   2. டெங்கு நோயை கட்டுப்படுத்தக் கூடிய மருந்து வகை இல்லாமை
   3. டெங்கு நோய் பற்றிய அறிவு இல்லாமை

6. நாட்டிலுள்ள சகல மரங்களையும் வெட்டி அகற்றினால் பின்வருவனவற்றில் ஏற்படக் கூடிய மிகப் பெரிய ஆபத்து?
   1. பறவைகளுக்கு கூடு கட்ட இடமில்லாமல் போய்விடும்.
   2. வீடுகள் கட்டப்படுவது நின்றுவிடும்.
   3. மழை வீழ்ச்சி குறைந்து வறட்சி ஏற்படும்.

7. முயற் கொம்பினால் செய்யப்பட்ட அலங்காரப் பொருட்களின் விலை சந்தையில் மிகவும் உயர்வாக இருந்தது. இது நடைபெற இயலாது. இதற்குக் காரணம்?
   1. முயலின் கொம்பை எடுத்தல் சட்டப்படி குற்றமாகும்.
   2. முயற் கொம்பில் அலங்காரப் பொருட்கள் செய்ய முடிவதில்லை
   3. முயலுக்குக் கொம்பு காணப்படுவதில்லை.

பின்வரும் பாடலை வாசித்து 8, 9 ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

கடலிற் பொங்கும் திரையைப்பார்
காற்றில் சிதறும் நுரையைப்பார்
அலைகள் மோதும் கரையைப்பார்
அவைகள் தடவும் தரையைப்பார்

8. கடலில் நுரைகள் தோன்றுவதற்குக் காரணம்?
   1. காற்று வீசுவதால் 2. கடல் பொங்குவதால்
   3. அலைகள் மோதுவதால்

9. இப்பாடலிலுள்ள ஒத்து ஒலிக்கும் சொற்கள்?
   1. கடலில், காற்றில் 2. திரை, நுரை 3. பொங்கும், மோதும்

***பின்வரும் அழைப்பினைப் பயன்படுத்தி விடை தருக.***

**வேல் முன்பள்ளி**
**மாணவர்களின் கல்விக் கண்காட்சி - 2013**

இடம் : சம்பந்தன் மண்டபம்
காலம் : ஏப்ரல் 18, 19 மற்றும் 20 ஆம் திகதி
காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை

இக் கண்காட்சியைப் பார்வையிட வருமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.
- வேல் முன்பள்ளி, திருமலை.

10. மேற்படி கல்விக் கண்காட்சி எத்தனை நாட்கள் நடைபெறவுள்ளது?
   1. 2 2. 3 3. 4

11. தினமும் கல்விக் கண்காட்சி எவ்வளவு மணி நேரம் நடைபெறும்?
   1. 7 மணித்தியாலம் 2. 7 மணி 30 நிமிடம் 3. 8 மணித்தியாலம்

12. இவ் அழைப்பிதழில் தேவையான அனைத்துத் தகவல்களும் காணப்படுகின்றதா?
   1. ஆம் 2. இல்லை 3. கூறமுடியாது

13. ஒரு மெழுகுவர்த்தி நான்கு மணிநேரம் ஒளிரும் இவ்வாறான நான்கு மெழுகுவர்த்திகளை ஒரே நேரத்தில் பற்ற வைத்தால் எத்தனை மணிநேரம் ஒளிரும்?
   1. 4 மணித்தியாலம் 2. 8 மணித்தியாலம் 3. 16 மணித்தியாலம்

14. அனுலா தனது 10வது பிறந்ததினத்தை இந்த வருடத்தின் யூன் 3ந் திகதி புதன் கொண்டாடுவாள். இவள் தனது 13வது பிறந்த தினத்தை எந்த கிழமை கொண்டாடுவாள்?
   1. வியாழன் 2. சனி 3. ஞாயிறு

பெயர்: ......................................................................
......................................................................
முகவரி: ......................................................................
......................................................................
......................................................................
பாடசாலை: ......................................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவில் மேலெழும் ஈழ மனித உரிமைகள்

## மார்ச் 2012 இலிருந்து மார்ச் 2013 நோக்கி...

மாயன்

இலங்கையின் இனப்போர் இரத்த வரிகளால் முடிவுறுத்தப்பட்டு ஆண்டுகள் நான்கைத் தொட்டு நிற்கின்றது.

1983ல் ஆரம்பித்துச் சிறுகச்சிறுக ஏனைய இரு இனங்கள் உட்பட தமது இனத்தாலும் படுகொலை செய்யப்பட்ட இனமொன்று பெரும் மனித அவலத்தைச் சந்தித்து ஐநாவின் கூற்றுப்படி 40,000ற்கும் மேற்பட்ட மக்களின் சாவின் போதுதான் தனது அழிவை உலகின் மனச்சாட்சியின் முன் நிறுத்தக் கூடியதாய் இருந்தது. 2009ல் உலுக்கப்பட்ட உலக மனச்சாட்சியின் முதலாவது நடவடிக்கையாக மார்ச் 2012ல் ஐநாவின் மனிதவுரிமைச் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை உலக நாடுகள் முன்மொழிந்து அத்தீர்மானத்தை வெற்றியடையவும் செய்திருந்தன.

முதலில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழு (ஐ.நா.ம.உ.ஆ) என்பது என்ன? என்பதை புரிந்துகொள்ள வேண்டியிருக்கும். ஐ.நா. சபையின் ஓர் உள்ளக அங்கத்துவ அமைப்பான ஐ.நா.ம.உ.ஆ உலகின் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், விருத்தி செய்யவும், மனித உரிமை மீறல்கள் எங்கெல்லாம் நிகழ்கின்றனவோ அவை தொடர்பான நிலமைகளை ஆராய்ந்து நடவடிக்கைப் பிரேரணைகளை மேற்கொள்ளவும் அதிகாரம் கொண்ட அமைப்பாகும். 2006ல் ஐநாவால் உருவாக்கப்பட்ட இவ் அமைப்பு 47 உறுப்பு நாடுகளைக் கொண்டு அமைகின்றது. இவ் ஆணைக் குழுவினால் உருவாக்கப்பட்ட கட்டுப்பட்டுச் செயற்பாட்டுப் பொதியானது பின்வரும் விடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அதனுள் முக்கியத்துவம் பெறும் கட்டுப்பாட்டுப் பொறிமுறையாக பூகோள காலக்கிரம ஆய்வு (Universal Periodic Review) முதனிலையை பெறுகின்றது.

பூகோள காலக்கிரம ஆய்வு என்பது ஐநாவின் உறுப்புரிமை நாடுகள் அனைத்திலுமுள்ள மனித உரிமை நிலவரங்களை மதிப்பிடும் ஓர் நடவடிக்கை ஆகும்.

மேலும் இரு செயற்பாட்டுப் பொறிகளாக "ஆலோசனைக் குழுவும்" (Advisory Commitee) மற்றும் "முறைப்பாட்டு முறை" (Complaint Procedure) ஆகியன முக்கியம் பெறுகின்றன

இங்கு ஆலோசனைக் குழுவானது மனித உரிமை நிபுணர்களால் உருவாக்கப்பட்டு மனித உரிமை மீறலுக்கு எதிராக நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யும் அமைப்பாகவும், முறைப்பாட்டு முறையானது மனித உரிமை மீறல் தொடர்பாக தனி மனிதனோ, நிறுவனங்களோ மனித உரிமை ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரும் வாசலாக உள்ளது. (திருமலைக் கடற்கரையில் கொல்லப்பட்ட மனோகரன் ரஜீகரனின் தகப்பனார் இங்கு தனிப்பட்ட முறையில் முறையிட்டுள்ளார்).

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை ஐநாவின் உறுப்பு நாடுகளால் 47 நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கான அங்கத்துவ நாடுகளாக தேர்வு செய்யப்படுகின்றன. இவ் 47 நாடுகளும் 13 ஆபிரிக்க நாடுகளாலும், 13 ஆசிய நாடுகளாலும், 8 இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபிய நாடுகளாலும், 7 மேற்கைரோப்பிய நாடுகளாலும், 6 கிழக்கைரோப்பிய நாடுகளாலும் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளன.

இவ் ஆணைக்குழுவில் 2012 மார்ச் மாதம் இலங்கையின் மீதான முதலாவது பிரேரணையை அமெரிக்கா முன்மொழிந்தது. அம் முன்மொழிவிற்கு அடிப்படையாய் இருந்தது இலங்கை அரசால் போர் குற்ற விசாரணைகள் தொடர்பாக நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான சனாதிபதி ஆணைக்குழுவும் அதன் அறிக்கையையும் ஆகும்.

இச் சனாதிபதி ஆணைக் குழுவால் முன்மொழியப்பட்ட தீர்வுத் திட்டங்கள் அறிக்கை வடிவில் உலகெங்கும் வலம்வரத் தொடங்கியவுடன் இலங்கை அரசு எப்போது அவ் அறிக்கையின் முன்மொழிவுகளை நிறைவேற்றப் போகின்றது என்னும் வினாவும் உலகெங்கும் எழுந்தது. ஏனெனில் நவம்பர் மாதம் 2011ம் ஆண்டில் சனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இவ் அறிக்கையின் எந்த ஒரு முன்மொழிவும் 2012 மார்ச் வரை செயற்படுத்தப்படவில்லை.

இதனடிப்படையில் மார்ச் 2012ல் அமெரிக்க முன்மொழிவால் ஐநாவின் மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்ட பிரேரணையானது இரண்டு முக்கிய விடயங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரியது.

*முதலாவது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுதல்.*

*இரண்டாவது அவ்வாறு நிறைவேற்றுவதற்கான தொழில்நுட்ப உதவிகளை ஐநாவின் மனித உரிமை ஆலோசனைச் சபையினர் வழங்குவதை ஏற்றுக்கொள்ளல்.*

ஆகியன இரண்டுமே.

இம் முதலாவது பிரேரணையைக் கடுமையான தொனியில் எதிர்த்த இலங்கை அரசு "எமது எதிர்காலத் திட்டங்களை எவற்றையும் கருத்திற்கொள்ளாது முன்னரே நடந்தவையையும், நடந்து கொண்டிருப்பவையையும் தொடர்பான ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இம் மனிதவுரிமைப் பிரேரணையானது இலங்கை போன்ற சிறிய நாடொன்றின் இறைமையைக் கடுமையாகப் பாதிக்கும்'' என அறிக்கையிட்டது. அக்காலத்தில் ஐநாவிற்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி தமாரா குணநாயகம் "மதிப்பீடுகளைச் செய்கிறார்களே ஒழிய உண்மை நிலையை அல்ல" என்று இப் பிரேரணை தொடர்பாகத் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார்.

எனினும் அமெரிக்காவின் அம் முன்மொழிவானது 24 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 15 நாடுகள் எதிர்க்க 8 நாடுகள் வாக்களிக்காமல் அமைதியாய் இருந்து விட 22 மார்ச் 2012ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அவ்வாறாயின் ஏன் மீளவும் ஒரு புதிய தீர்மானத்தை மார்ச் 2013ல் அமெரிக்கா முன்மொழிகின்றது எனும் கேள்வி எழுகின்றது.

மார்ச் 2012லிருந்து மார்ச் 2013 வரையான இப் பன்னிருமாத காலப் பகுதிகளில் நான்கு முக்கிய விடயங்கள் இலங்கை மீது மேலதிக அழுத்தத்தை அங்கத்துவ நாடுகள் கொண்டுவரக் காரணிகள் ஆகின. கால ஒழுங்கில் அந் நான்கு காரணிகளும் முறையே

*1. 2012 நவம்பர் மாதம் நடைபெற்ற பூகோளக் காலக்கிரம ஆய்வு.*

*2. அதே மாத காலப்-பகுதியில் ஐ.நா. செயலாளர் நாயகத்தால் உருவாக்கப்பட்ட இலங்கை தொடர்பான உள்ளக மீளாய்வுக் குழுவின் அறிக்கை.*

*3. 2012ன் கடைசிக் காலப் பகுதியில் கொண்டுவரப்பட்ட "திவி நெகும" சட்ட மூலமும் அது நிறைவேற்றப்பட்ட விதமும்.*

*4. 2013ன் முதலிரண்டு மாதங்களிலும் இலங்கை நீதித்துறையின் மீதும் அதன் சுயாதீனத்தைச் சூறையாடும் முகமாகவும் பிரதம நீதியரசரை பதவி நீக்கி தமக்கு விசுவாசியான ஒருவரை அப்பதவிக்கு நியமித்தமை.*

ஆகியனவையே ஆகும்.

இந் நான்கு காரணிகளிலும் முதலாவது காரணியை மட்டும் சிறிது ஆராய வேண்டிய தேவை எமக்குண்டு.

பூகோள காலக்கிரம ஆய்வின் முடிவில் இலங்கை மீது திணிக்கப்பட்ட 204 சிபாரிசுக்களில் 110 சிபாரிசுக்கள் இலங்கையால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஏனைய 94ம் நிராகரிக்கப்பட்டன. இங்குதான் இலங்கையின் அரசியற் தந்திரம் தோற்றதாக சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர் ச.வி. கிருபாகரன் தெரிவித்திருந்தார். ஏனெனில் நிராகரிக்கப்பட்ட அத் 94 விடயங்களும் மிக முக்கியமான விடயங்களாக ஐ.நாவின் உறுப்புரிமை நாடுகளால் நோக்கப்படுகின்றன. அவற்றுள் கட்டாய ஆட்கடத்தலுக்கு எதிரான சர்வதேச சட்டத்தை நடைமுறைப்படுத்தல், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுக்களை முழுமையாக நடைமுறைப்படுத்தல், சிறுபான்மையினருடனான அதிகாரப் பகிர்வு தொடர்பாக இலங்கை அரசால் முன்னரே நியமிக்கப்பட்ட நான்கு ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை அமுல்படுத்தல், பொதுமக்கள் மத்தியில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல், சட்டத்துறையின் சுயாதீனத் தன்மையை உறுதிப்படுத்தல் ஆகிய சிபாரிசுக்களையும் சேர்த்தே இலங்கை அரசு மறுதளித்திருந்தமையானது உலகிற்கு அரசின் பேரினவாதச் சிந்தனைகளைப் படம்பிடித்துக் காட்டியிருந்தது. நாட்டின் இறைமையின் பெயரால் இத் 94 சிபாரிசுக்களையும் இலங்கை மறுத்திருந்தது. ஆனால் அத் 94ற் சிலவற்றையேனும் ஏற்றுக் கொண்டிருந்தால் மேலும் நான்கு ஆண்டுகளுக்கு இலங்கை மீது எவ்வித அழுத்தங்களையும் பிரயோகிக்க முடியாது இருந்திருக்கும். அதனாலேயே இம் மறுதளிப்பால் இலங்கையின் இராசதந்திரம் தோற்றது எனலாம்.

ஆனால் இலங்கை மீது புதிய குற்றப் பிரேரணையை கொண்டுவர உதவிய பூகோள காலக்கிரம ஆய்வு தவிர்ந்த ஏனைய மூன்று நிகழ்வுகளும் இந் நிராகரிக்கப்பட்ட 94 சிபாரிசுகளுள் சிலவற்றை மீறுவதாயிருப்பதைக் காணலாம்.

எனவேதான் மார்ச் 2013ன் பிரேரணை கடுமையான எதிர்விளைவை இலங்கைக்கு ஏற்படுத்தவுள்ளது. இனி மார்ச் 2013ல் என்ன நிகழும் என்பதனை அடுத்த வாரம் எதிர்வு கூறுவோம்.

## கு. ரஜீபனின் பேசற்க.. தொகுப்பிலிருந்து

### மழையின் கலப்படம்

தறைக்குள் இருந்த
கடைசி நாத்தும் கருகியது.
கடலின் கலப்படம்
மழையில் தெரிந்ததால்
பயிர்களின் வளர்நிலை
பாழ்பட்டது.

பூச்சி நாசினி திருடுபோனதால்
பூக்களைக் கூட
புழுக்கள் விட்டுவைக்கவில்லை.
தறைக்குள் இருந்த
கடைசி நாத்தும் கருகியது.

கட்டாக் காலிகள் வரவும்
பயிரின் கருகலுமே
கட்டாயமாக்கப்பட்டதால்
இனி!
பயிர்கள் வைப்பதில் பயனில்லை.

### முத்தல் பேன்கள்

ஈர்கள் முத்தி குஞ்சாகி
எல்லாத் தலையிலும் ஒருது
பேன்கள் கொழுத்துப் போனதால்
விறாண்டல்களும் வீரியமாகியது.

ஈர்வாரி இல்லா தேதால்
இவற்றை
தூர்வார முடியவில்லை.
பேன்சீப்புகளும்
பிரியாவிடை கொண்டதால்
குஞ்சுகள் மொழியன்களாக
வீங்கித் திரிகிறது.
சீப்புக்குள் சிக்காமல்
சேட்டைகள் செய்கிறது.

பேன்கள் முத்திப் புழுத்துப்
போனதால்
எல்லாத் தலைகளும் குந்தியிருந்து
விறாண்டத் தொடங்கியது.

### பொரியல்

எண்ணெய் இல்லாத பொரியல்
பொரிந்து கொண்டிருக்கிறது.
கருகும் அவைகளை
பொரியல் என்று விற்கிறார்கள்.
அவை!
பொரிந்து பொரிந்து
அடங்கும் சத்தத்தில்
கருக்கல் ஞாபகங்கள்
கண்விழிக்கிறது.

பொரியல் சத்தம்
பொங்கி எழுகிறது
எல்லாப் பொரியலும் பொரிவதால்.

பொரிதலுக்கான பொழுது
நெருங்கி அமைந்ததால்
அவர்கள் பொரியல்
அங்கீகரிக்கப்படுகிறது.

பொரியல் கடை போக்குமாற்ற
பொரிக்கும் வகையை
உரத்து உரைப்போம்.

எல்லாப் பொரியலும்
பொரியலுமல்ல
எல்லாப் பொரித்தலும்
பொரித்தலுமல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவானில் கலைவிழா – 2012ல்

## வெற்றிபெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு

**எ**ழுவானில் கலைவிழாவில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு 16.02.2013ல் இராஜரெட்ணம் நடனாலய பெற்றோர்களால் பிரதான வீதியில் அமைந்துள்ள பிருந்தாவனம் மண்டபத்தில் இடம்பெற்றது. இதற்கு பிரதம அதிதியாக...
மாவட்ட அலுவலகத்தின் கலாச்சார உத்தியோகத்தர் செல்வி லதா மங்கேஸ் சோமஸ் கந்த சர்மா அவர்கள் பங்குபற்றி வெற்றியீட்டியவர்கட்கு வெற்றிப் பதக்கமும் சான்றிதழும் வழங்கி கௌரவித்தார். மேலும் இந்நிகழ்ச்சியை சிறப்பாக நெறியாள்கை செய்தமைக்காக இராஜரெட்ணம் நடனாலயத்தின் இயக்குனர் திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரனுக்கு வாழ்த்துப்பா பாடப்பட்டதுடன் பிரதம அதிதியால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.



இனங்களுக்கிடையே சமத்துவத்தைப் பேணவும், கிராமங்களிடையே காணப்படும் கலை இலக்கியங்களை வெளி உலகிற்கு கொண்டு வரவும், தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை ஒரே மேடையில் ஒன்றிணைக்கவும், தமிழ் முஸ்லிம் சிங்கள மக்களிடையே கிராமங்களில் காணப்படும் முத்தமிழ் காவியங்களை வெளிக்கொணரவுமென மாகாண கல்வித் திணைக்களத்தால் 03 வது வருடமாக நடாத்தப்படும் "எழுவானில் கலைவிழா-2012" எனும் கலை நிகழ்வின் மாகாண மட்ட இறுதிப் போட்டியானது கடந்த ஞாயிற்றுக்கிழமை ( 02.12.2012 ) மட்டக்களப்பு கோட்டைமுனை இந்துக் கல்லூரி உள்ளக அரங்கில் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு.D.W.U.வெலிகல அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கடந்த 03 மாதங்களாக மாவட்ட மட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டி 01ம் இடத்தினை பெற்ற குழுக்கள் மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றின. இதில் மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் திரு.K.விமலநாதன் பிரதம அதிதியாகவும். கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர், மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாச்சார உத்தியோகத்தர், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர், முதலமைச்சர் செயலகத்தின் பிரதம கணக்காளர். மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர், மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் உதவிச் செயலாளர் ஆகியோர் அதிதிகளாக பங்குபற்றினர். இதில் காவடி மற்றும் தில்லானா ஆகிய நடனப்பிரிவில் திருகோணமலை இராஜரெட்ணம் நடனாலயம் 01ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. இந் நடனங்களை திருமதி ரேணுகாதேவி செல்வபுத்திரன் நெறியாள்கை செய்திருந்தார். மாகாண மட்டப் போட்டியில் வெற்றியீட்டியவர்கட்டு வெற்றிக்கேடயமும், 5000.00 பணப்பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டன.

தகவல் - ச. அன்ரனிதாஸ்



# கட்டைப்பறிச்சானில் நகைப்பறி...

..தப்பி ஓடி விட்டனர் அதன் பிறகு தன்னை சுதாகரித்துக் கொண்ட கடை உரிமையாளர் ,அங்கு ஒரு காசுப்பை இருப்பதை கண்டுள்ளார். அந்த காசுப்பையை பரிசோதித்த உரிமையாளர் 'அப்பையில் சில வரவட்டைகளும் இரண்டு சிட்டைகளும் இருப்பதை அவதானித்துவிட்டு கட்டைப்பறிச்சான் சமூக பாதுகாப்புக் குழுவிடம் அறிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து கட்டைபறிச்சான் சிவில் பாதுகாப்பு குழு மற்றும் சம்பூர் காவல் துறைப்பொறுப்பாளர் V.P.P. ராமநாயக்க தலைமையிலான காவல் துறையினர் அவ் இரண்டு சிட்டைகளும் கடந்த வெள்ளிக்கிழமை சம்பூர் பத்திரகாளி கோவில் அன்னதானத்துக்காக கடற்படைக்கு மட்டும் வழங்கப்பட்டது என்பதை கண்டுபிடித்தனர்.

உடனடியாக விரைந்து செயல்ப்பட்ட சம்பூர் காவல் துறைப்பொறுப்பாளர் V.P.P. ராமநாயக்க கடற்படை முகாமிற்கு சென்று விசாரணைகளில் ஈடுபட்டு அடையாள அணிவகுப்புக்கு ஒழுங்கு செய்தார்.

அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்ட கடை உரிமையாளர் இரண்டு கடற்படை வீரர்களை அடையாளம் காட்டினார்.

அதனை தொடர்ந்து கைது செய்யப்பட்ட இரண்டு கடற்படை வீரர்களும் மேலதிக விசாரனைக்காக சம்பூர் காவல் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

# நடந்தேறியது மாபெரும் மிருதங்கச் சங்கமம்.

சின்னவள்ளி மிருதங்க கலாமன்றம் தனது முப்பது வருட பூர்த்தியை முன்னிட்டு மிருதங்க நாதாமிருதம் எனும் மாபெரும் மிருதங்கச் சங்கமத்தை நடாத்தியது. சின்னவள்ளி மிருதங்க கலாமன்ற மாணவர்களால் ஆற்றப்பட்ட இவ் மிருதங்க நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுதபாணியும் கௌரவ விருந்தினராக திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் விஜேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் நுண்கலைப்பீட முன்னாள் விரிவுரையாளர் சிதம்பரநாதன் மற்றும் கன்னியா லலிதாம்பாள் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சுவாமி சுவஸ்தானந்தா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் 10-02-2013 ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற இந்நிகழ்வில் "மிருதங்க நாதாம்ருதம்" என்னும் விழாச் சிறப்பு மலரும் வெளியிடப்பட்டது.






# மாணவர்களிடம் பணம்..

அதிபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப். ஏ. மஜீத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மீள் சுற்று நிருபமொன்று விரைவில் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கூட்டுறவு அபிவிருத்தி..

2010ம் ஆண்டில் நடந்த போட்டிப் பரீட்சையில் தேறிய இவர்களுக்கு மாகாண சுகாதார மற்றும் சமூகசேவைகள் அமைச்சர் எம்.ஐ. முகமட் மன்சூர் நியமனங்களை வழங்கினார்.



# – போதைப் பொருட் கடத்தல் – வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கைது

பணியின் நிமித்தம் வெளிநாடுகளுக்கென தம்மால் அனுப்பப்படும் பயணிகள் ஊடாக போதைப்பொருட் கடத்தலில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஒருவர் காவல் துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பல காலமாக நீடித்து வந்துள்ள இக்கடத்தலில் ஹெரோயினைக் கடத்த "டெடி" கரடி பொம்மைகள் பயன்பட்டுள்ளன. தமது முகவரகம் ஊடாக தொழில் வாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களிடம் இக்கரடி பொம்மைகளை முகவர் நிறுவனம் கொடுத்து வெளிநாட்டில் தமது நண்பர்கள் வந்து பெற்றுச் செல்வார்களென போரிக்கை இட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பயணிகள் இக்கரடி பொம்மைகளை விமான நிலையமூடாக எடுத்துச் சென்றுள்ளனர். சுமார் 100,000 ரூபாய் பெறுமதியான போதைப்பொருள் இப் பொம்மைகள் ஒவ்வொன்றுக்குள்ளும் பொதியிடப்பட்டுள்ளன.





# உயர் தேசிய திப்புளோமா மாணவர் அனுமதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளது (HNDA, HNDE, HNDIT)

**தி**ருக்கோணமலை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் உயர் தேசிய திப்புளோமாக் கல்வி நெறியினைக் கற்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

2011ம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கே முழுநேர மற்றும் பகுதிநேர வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. உயர் தேசிய திப்புளோமாப் பட்டம் சாதாரண பல்கலைக்கழகப் பட்டத்திற்கு ஒப்பானது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கல்வி நெறிகளுக்கு 28.02.2013 வரை விண்ணப்பிக்க முடியும்

# கால்நடை விவசாயிகள் விழா

நான்கு கால்நடை நலன்புரிக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளை மெச்சிப் பாராட்டும் விழாவாக அமைந்திருந்தது. சேனையூர் மத்திய கல்லூரியில் மாசி 12ம் திகதி நடந்தேறியது. கட்டைப்பறிச்சான் வழக்கு மற்றும் தெற்கு சேனையூர், கிளிவெட்டி ஆகிய பிரதேசங்களில் "பீஸ் விண்ட்" நிறுவன உதவியுடன் அமைக்கப்பட்ட கால்நடை நலன்புரிச் சங்கங்களுக்கிடையே சிறந்த முகாமைத்துவ செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு போட்டி நடாத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன. இவ் விழாவில் "பீஸ் விண்ட்" நிறுவனம் 20 ஜேசி இன பசுக்களையும் 4 காளை மாடுகளையும் கால்நடை நலன்புரிச் சங்கங்களுக்கு வழங்கிவைத்தன.

# கிழக்கு மாகாண சபையில் விசேட அமர்வுகளுக்கு அனுமதி.

கிழக்கு மாகாணத்தில் அவசர நிலமைகளின் போதும் இயற்கை அனர்த்த நிலமைகளின்போதும் தேவை கருதி விசேட அமர்வுகளை நடாத்த கிழக்கு மாகாணசபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமான் லெப்பையினால் கொண்டுவரப்பட்ட இத் தனிநபர் பிரேரனையே சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

# திருமலை மாவட்டத்துக்கு..



முன்னேற்றுதல் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்றாம் கட்ட செயற்திட்டத்தால் திருக்கோணமலையில் வாழும் சுமார் 2000க்கு மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இச் செயற்திட்டமானது ஜப்பான் அரசசார்பற்ற நிறுவன ஒத்துழைப்பு நன்கொடை திட்டத்தின் கீழ் பீஸ் விண்ட் ஜப்பான் நிறுவனத்தால் செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தெரிந்து கொள்ளுங்கள்...


**நிச்சயம் தவிர்க்க வேண்டிய ஆரோக்கியமற்ற பழக்கங்கள் பத்து.**

- மது அருந்தல்.
- புகைப்பிடித்தல்.
- போதைப்பொருள் பாவனை.
- அதிகநேர இணையப் பாவனை.
- அடிக்கடி தேநீர் குடிப்பது.
- தொடர்ச்சியான தொலைக்காட்சிப் பார்வை.
- அளவுக்கு அதிக உணவு உண்பது.
- தனிமையிலிருப்பது.
- தூக்க மாத்திரை விழுங்குவது.
- கையடக்க தொலைபேசிகளை நீண்ட நேரம் பாவிப்பது.

## அறிவாயுதம்

முன்னொரு காலத்தில் ரத்தினபுரி நாட்டை ஆண்டு வந்த அரசர், தன் மந்திரி வர்ணனிடம் பேசிக் கொண்டு இருந்தார். அவர்களின் பேச்சு அறிவுக்கூர்மை பற்றி இருந்தது. "அறிவுக்கூர்மை உடையவர்களால் எதையும் செய்து முடிக்க முடியும். அவர்களால் செய்ய இயலாத செயலே இல்லை" என்று கூறினான் மந்திரி. அவன் கருத்தை அரசர் ஒப்புக் கொள்ளவில்லை. "அரசே! செய்ய இயலாத செயல் ஒன்றைச் சொல்லுங்கள்... நான் அதைச் செய்து காட்டுகிறேன்'' என்றான் மந்திரி! "மந்திரியே! நீ ஏதேனும் வீரச் செயல் செய்யப் போவதாகச் சொல்ல வேண்டும். அதற்காக மக்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அதைச் செய்யாமல் அவர்களிடமிருந்து தப்பிக்க வேண்டும். உன்னால் முடியுமா?" என்றார் அரசர்.

"அரசே! மிக எளிய செயலைத்தான் சொல்லி இருக்கிறீர்!" என்றான் மந்திரி. "மந்திரியாரே! நீ நினைப்பது போல் இது எளிய செயல் அல்ல. வீரச் செயல் செய்வதாகச் சொல்லி, மக்களின் கூட்டத்தைக் கூட்டுவது எளிது. பிறகு அதைச் செய்யாவிட்டால், அந்தக் கூட்டம் உன்னைத் தப்பிக்க விடாது. நீ அவமானப்படத்தான் போகிறாய்" என்றார். ''அரசே! இதில் எனக்கு எந்த அவமானமும் ஏற்படாது. பொறுத்திருந்து பாருங்கள்" என்ற மந்திரி அங்கிருந்து சென்றான். சில நாட்கள் சென்றன- மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதைப் பார்த்தார் அரசர். வியப்படைந்த அவர் தன் வேலையாட்களிடம், ''மக்கள் கூட்டமாக எங்கே செல்கின்றனர்?" என்று கேட்டார். "அரசே! எல்லோரும் கோயிலை நோக்கிச் செல்கின்றனர். அங்கே கோபுரத்தின் உச்சியில் மந்திரி நின்று கொண்டிருக்கிறார். இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன் என்று கத்திக் கொண்டிருக்கிறார். அதை வேடிக்கை பார்க்கத்தான் எல்லாரும் சென்று கொண்டிருக்கின்றனர்" என்றான். தான் வைத்த சோதனையின் முதல் பகுதியை செய்துவிட்டான். இதிலிருந்து அவன் எப்படி தப்பிக்கப் போகிறான்? அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு ஏற்பட்டது. என்ன நடக்கிறது என்பதை வேடிக்கை பார்க்க அவரும் அருகே சென்றார். கோபுரத்தின் உச்சியில் மந்திரி நின்றிருந்தான். "இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன். இப்படி யாரும் இதுவரை செய்தது இல்லை" என்று கத்திக் கொண்டிருந்தான். அவன் குதிப்பதை வேடிக்கை பார்க்க நகர மக்கள் எல்லாரும் அங்கே வந்திருந்தனர். "நான் ஒன்று, இரண்டு என்று பத்து வரை எண்ணப் போகிறேன். பத்து என்று சொன்னதும், கீழே குதிக்கப் போகிறேன். நான் பேச்சு தவற மாட்டேன். என் வீரச் செயலைப் பார்க்கத்தான் போகிறீர்கள்'' என்ற அவன் ஒன்று, இரண்டு என்று எண்ணத் தொடங்கினான். என்ன நடக்கப் போகிறதோ என்று ஆர்வத்துடன் மக்கள் பார்த்துக் கொண்டிந்தனர். ஒன்று, இரண்டு என்று எண்ணிக் கொண்டிருந்தான் மந்திரி. அவன் கண்கள் கூட்டத்தில் யாரையோ தேடின... தான் தேடியவன் வந்திருப்பதை அறிந்து, தொடர்ந்து எண்ணத் தொடங்கினான். அவன் ஒன்பது என்று எண்ணினான். கூட்டத்திலிருந்து ஒரு குரல், "எண்ணுவதை நிறுத்தி விட்டுக் கீழே வாருங்கள்" என்று கேட்டது. யார் குரல் கொடுத்தது என்று எல்லாரும் பார்த்தனர். அங்கே மந்திரியின் மகன் கையில் ஒரு பாத்திரத்துடன் நின்றிருந்தான். உரத்த குரலில் அவன், "தந்தையே! உங்களுக்கு மிகவும் பிடித்தமான பணியாரம், அம்மா ஆசையாக உங்களுக்காகச் செய்தது. கீழே இறங்கி வந்து இதைச் சாப்பிடுங்கள். பிறகு குதியுங்கள் மீண்டும் இதைச் சாப்பிடுவீர்களோ, இல்லையோ... யார் கண்டது!" என்றான். "எனக்கு மிகவும் பிடித்த பணியாரத்தை என் மகன் கொண்டு வந்திருக்கிறான். நீங்கள் அனுமதி தந்தால் அதைச் சாப்பிட்டு விட்டுப் பிறகு குதிக்கிறேன். நீங்கள் அனுமதி தருவீர்களா?" என்று கேட்டான் எல்லாரும் தங்களுக்குள் ஏதோ முணுமுணுத்தனர். "பணியாரத்தைச் சாப்பிட்டு விட்டுக் கீழே குதி" என்று அவர்களில் ஒருவர் குரல் கொடுத்தார். கீழே இறங்கி வந்தான் மந்திரி. தன் மகனின் கையிலிருந்த பாத்திரத்தை வாங்கினான். அதிலிருந்த பணியாரத்தைச் சுவைத்துச் சாப்பிட்டான். அப்படியே மயங்கி விழுந்தான். இதைப் பார்த்த கூட்டத்திலிருந்த சிலர், "அதிர்ச்சியில் மயக்கமாகி விட்டான்'' என்றனர். மற்றும் சிலர், "உயிர் தப்புவதற்காக மயக்கம் வந்தது போல நடிக்கிறான்'' என்றனர். அரண்மனை மருத்துவர் அங்கு வந்தார். மந்திரியை சோதித்த அவர், "உண்மையிலேயே மயக்கமாகி விட்டான். மயக்கம் தெளிய ஏழெட்டு மணி நேரம் ஆகும்" என்றார். மந்திரியை, அவர் வீட்டிற்குத் தூக்கிச் சென்றனர். "ஐயோ! இப்படியாகி விட்டதே!" என்று பேசிக் கொண்டே கூட்டத்தினர் கலைந்து சென்றனர். மறுநாள் அரசரைச் சந்தித்தான் மந்திரி. "நீங்கள் சொன்னது போல் வீரச் செயல் செய்வதாக பெரிய கூட்டத்தைக் கூட்டினேன். அவர்கள் எதிரிலேயே அந்தச் செயலைச் செய்யாமல் வந்து விட்டேன். எப்படி என் திறமை?" என்று கேட்டான். ''அப்போது உன் மகன் பணியாரங்களுடன் வரவில்லையானால் உன் நிலை, என்னவாகி இருக்கும்?" என்று கேட்டார் அரசர். "அரசே! அந்தப் பணியாரங்களுக்குள் மயக்க மருந்து கலந்து எடுத்து வரச் சொன்னதே நான்தான். எல்லாம் என் திட்டப்படி நடந்தது'' என்றான் மந்திரி. ''அறிவுக்கூர்மை உள்ளவர்களை யாராலும் வெற்றி பெற முடியாது என்பதை உன் மூலம் புரிந்து கொண்டேன்'' என்று அவனைப் பாராட்டினார் அரசர்.





## அழகுக் குறிப்புகள்..

* கடலைமாவுடன் சிறிது மஞ்சள் தூள், எலுமிச்சை சாறு, ஒரு டேபிள் ஸ்பூன் பால் கலந்து முகத்தில் தடவி, காய்ந்தவுடன் மிதமான சுடுநீரில் கழுவ, முகம் மிருதுவாகும்.
* ஆலிவ் எண்ணெயுடன் சர்க்கரை கலந்து உள்ளங்கைகளில் தேய்த்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய உள்ளங்கைகளின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும்.
* பச்சை உருளைக்கிழங்கின் சாற்றை முகத்தில் தடவிவர சூரியக் கதிர்களால் ஏற்படும் கருமை நிறம் மாறும்.
* 2 ஸ்பூன் முள்ளங்கி சாற்றுடன் 2 ஸ்பூன் மோர் சேர்த்து, முகத்தில் தடவி, ஒரு மணிநேரம் கழித்து, சுடுநீரில் முகத்தை கழுவ வேண்டும். இதை தினசரி செய்துவர, வெப்பத்தால் முகத்தில் ஏற்படும் தவிட்டு நிறமுள்ள புள்ளி மறையும்.மூ தேங்காய் தண்ணீரை முகத்தில் தொடர்ந்து 6 மாதம் தடவி வர சின்னம்மையால் ஏற்பட்ட வடு மறையும்.
* பூசணிக்காயை சிறு துண்டுகளாக்கி அதை கண்களை சுற்றி வைக்க கண்களைச் சுற்றி ஏற்படும் கருவளையம் மறையும்.
* பப்பாசிப் பழத்தை அரைத்து, முகத்தில் தொடர்ந்து தடவிவர முகப்பரு, கரும்புள்ளி ஆகியவை மறையும்.
* புளித்த மோரை முகத்தில் 15 நிமிடம் தடவி, மிதமான சுடுநீரில் கழுவ முகம் பொலிவு பெறும். இதை தொடர்ந்து 15 நாட்களுக்கு செய்துவர நல்ல பலன் கிடைக்கும்.
* முழங்கை (முட்டி) கருப்பாகவும், சொர சொரப்பாகவும் இருந்தால், தேங்காய் எண்ணெயுடன் எலுமிச்சை சாறு கலந்து தடவிவர மிருதுவாக மாறும்.
* தேன் மற்றும் எலுமிச்சை சாறு கலந்த கலவையை உதட்டின் மீது தொடர்ந்து தடவி வந்தால், தரம் குறைந்த லிப்ஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் கருமை நிறம் மறையும்.
* தயிருடன் கடலை மாவு கலந்து முகத்தில் தடவி 15 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்வதால் முகத்தில் ஏற்படும் சுருக்கம் மறையும்.



* முட்டை கோஸ் சாறு, சிறிது ஈஸ்ட், ஒரு டேபிள் ஸ்பூன் தேன் மூன்றையும் கலந்து, 20 நிமிடம் முகத்தில் தடவி, மிதமான சுடு தண்ணீரில் முகத்தை கழுவ வேண்டும். இதனால், முகச் சுருக்கம் மறைந்து, முகம் பொலிவுடன் இருக்கும்.
* சுண்ணாம்பை தண்ணீர் கலந்து காலையில் தடவினால், மாலைக்குள் முகப்பரு மறைந்து விடும்.
* வெள்ளை முள்ளங்கி சாறுடன், 2 ஸ்பூன் எலுமிச்சை சாறு, 2 ஸ்பூன் தக்காளி சாறு சேர்த்து முகத்தில் தடவி 20 நிமிடம் கழித்து, மிதமான சுடுநீரில் கழுவ வேண்டும். இதை தொடர்ந்து செய்துவர, வெப்பத்தால் உண்டாகும் தவிட்டு நிறப் புள்ளி மறையும்.
* உலர்ந்த சருமம் உள்ளவர்கள் கிளிசரினுடன் ரோஸ் வாட்டர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவலாம்.
* முகம் மிருதுவாகவும், ரோஸ் நிறத்துடனும் இருக்க ரோஜாப் பூ இதழ்களை அரைத்து, அதோடு பால் , பச்சை பயிறு மா, மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவி வர சருமம் பளபளக்கும்.
* கரும்புள்ளி உள்ள இடத்தில்,பச்சை பயிருடன் தயிர் சேர்த்து தடவ வேண்டும். அது காய்ந்ததும் கைகளால் மேலும் கீழும் நன்கு தேய்த்து பின் முகத்தை கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறையும்.
* கடலை மாவு ஆறு டீஸ்பூன், பாலாடை இரண்டு டீஸ்பூன், எலுமிச்சம் பழச்சாறு 10 சொட்டு, கிளிசரின் ஒரு டீஸ்பூன் கலந்து தினம் ஒருமுறை முகம், கை, கழுத்து பகுதிகளில், தடவினால் வெயிலினால் ஏற்படும் கருமையை போக்கலாம். பப்பாசி கூழுடன் தேன் கலந்து முகத்தில் தடவி வந்தாலும் நல்லது.

## பச்சைப்பயறு குழம்பு



***தேவையான பொருட்கள்:***

பச்சைப்பயறு - 100 கிராம், சின்ன வெங்காயம் - 10, வெள்ளைப்பூண்டு - 10 பல், தக்காளி - 1 பெரியது, மிளகுத்தூள் - 1/2 தேக்கரண்டி, பச்சை மிளகாய் - 1, சீரகம் - 1/2 தேக்கரண்டி, எண்ணெய் - 2 தேக்கரண்டி, கடுகு - 1/2 தேக்கரண்டி, உளுத்தம் பருப்பு - 1/2 தேக்கரண்டி, கடலைப் பருப்பு - 1/2 தேக்கரண்டி, புளி - கோலி உருண்டை அளவு, பெருங்காயம் - 2 சிட்டிகை, உப்பு - தேவையான அளவு

***செய்முறை:***

1. பச்சைப்பயற்றை வாசனை வரும் வரை நன்றாக வறுத்துக் கொள்ளவும். பிறகு தண்ணீரில் நன்றாக அலசி கழுவிக் கொள்ளவும்.
2. சின்ன வெங்காயம், வெள்ளைப் பூண்டு ஆகியவற்றை தோல் நீக்கி வைத்துக் கொள்ளவும்
3. குக்கரில் கழுவிய பச்சைப்பயறு, வெள்ளைப்பூண்டு, வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், சீரகம், மிளகுத்தூள், சிறிது எண்ணெய் ஆகியவற்றைச் சேர்த்து, இவையனைத்தும் மூழ்கும் அளவு தண்ணீர் சேர்த்து மூடி வைத்து வேக விடவும்.
4. குக்கரில் 4 அல்லது 5 விசில் வரும் வரை வேக விட்டு அடுப்பிலிருந்து இறக்கவும்.
5. பிறகு வெந்த பச்சைப்பயற்றில் புளியைச் சேர்த்து நன்றாகக் கடையவும்.
6. பிறகு எண்ணெய் ஊற்றி, கடுகு, கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு சேர்த்து தாளித்து, பெருங்காயம், மிளகாய், கறிவேப்பிலை போட்டு வறுத்து, இதனுடன் கடைந்து வைத்துள்ள பச்சைப்பயறு மசியலை சேர்த்து, தேவையான அளவு தண்ணீர், உப்பு சேர்த்து கொதிக்க விடவும்.
7. குழம்பு கொஞ்சம் கெட்டியானதும் அடுப்பிலிருந்து இறக்கி பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர்களுக்கு தடை எதுவும் இருக்கக்கூடாது.

அமெரிக்க பின்புலத்துடன் ஐக்கியநாடுகள் மனித உரிமைக் கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையில் "இலங்கைக்குள் ஐக்கிய நாடுகள் சபை அலுவலர்களுக்கு தடையற்ற கையாள்கையை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்" எனும் விடயம் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தடையற்ற கையாள்கையை மேற்கொள்பவர்கள் நீதிபதிகளின் மற்றும் சட்டவாளர்களின் சுயாதீனம், துன்புறுத்தல் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்களின் கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்ட கொலைகள், தன்னிச்சையற்ற காணாமற் போதல்கள் போன்றவை தொடர்பாக இலங்கைக்குள் தடையற்ற கையாள்கையை மேற்கொள்ளும் வழிவகையினைக் கோரி நிற்கின்றது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள மனித உரிமை மாதிரிப் பிரேரணையில் இவ்விடயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது என்பதுடன் உறுப்புரிமை நாடுகளால் மேலும் பல மாற்றங்களுக்கு உள்ளாகிய பின்னரே மனித உரிமை கூட்டத்தொடரில் முன்வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

இப்பிரேரணை வெற்றியளிக்குமாயின் இலங்கையின் வெளிநாட்டு கொள்கை மீதான கடும் விமர்சனங்களை உருவாக்கிவிடும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இரண்டாவது விடயமாக இப்பிரேரணையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை தடையின்றி உடனடியாக நிறைவேற்றும் நடவடிக்கைகளை இலங்கை மேற்கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாதிரிப் பிரேரணையானது ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை ஆணையாளர் நவிபிள்ளை அவர்களால் முன்வைக்கப்பட்ட இலங்கையின் மனித உரிமை நிலவரம் பற்றிய அறிக்கையினை வரவேற்றுள்ளது. நவிபிள்ளையின் அறிக்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் நீதித்துறைச் சுதந்திரத்தன்மை மற்றும் சட்டப்பிரயோகம் ஆகியவை தொடர்பாக அரசு பொறுப்பிலிருந்து தவறியமை குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

### 25வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ள மின்சாரச்செலவு

பொதுப்பாவனை ஆணைக்குழுவினால் பரிசோதனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள இலங்கை மின்சார சபையின் கட்டண அதிகரிப்பு மதிப்பீடுகளிலிருந்து மின்சாரக் கட்டணம் 25 வீதத்தால் அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாக தெரிய வருகின்றது.

மின்சார உருவாக்கம், மின் கடத்தல் மற்றும் விநியோகித்தலுக்காக 268 பில்லியன் ரூபாய்களை செலவிட இலங்கை மின்சார சபை இவ்வருடத்தில் உத்தேசித்துள்ளது. இதனுள் மின்சார உற்பத்திக்கு மட்டுமே 235 பில்லியன் செலவிடப்படவுள்ளது. இதனடிப்படையில் இச் செலவுகளை சமாளிப்பதற்குத் தேவையான அளிவிற்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் முகமாகவே மின்சாரக் கட்டணத்தைத் தற்போதுள்ள பெறுமதியிலிருந்து அலகுக்கு 25 வீதத்தால் அதிகரிப்பதற்குப் பிரேரணையிடப்பட்டுள்ளது

### 800 ஏக்கர் நிலப்பரப்பில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள்

ஹம்பாந்தோட்டையில் 800 ஏக்கர் நிலப்பரப்பில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள அரசு நில ஒதுக்கீடுகளை மேற்கொள்ளவுள்ளது. முதலீட்டு விருத்தி அமைச்சரின் கூற்றுப்படி இப்பிரதேசங்களில் மகிளுந்து பொருத்துகை மற்றும் கண்ணாடி, சீனி தொழிற்சாலைகளை வெளிநாட்டு முதலீட்டுடன் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. இம்முதலீட்டுத் திட்டங்களுள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை பயன்படுத்தவுள்ள திட்டங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. அத்துடன் 300 ஏக்கர் நிலப்பரப்பானது 3 வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை உருவாக்கவும், தகவல் தொழினுட்ப பூங்காவாகப் பயன்படுத்தவும் தீர்மானமெடுக்கப்பட்டுள்ளது.

## The Sunday Observer:

### புதிய மத்தள விமான நிலையத்திற்கு வொஷிங்டனிலிருந்து விசேட விமானம்

மார்ச் 18ல் திறந்து வைக்கப்படவுள்ள மத்தள சர்வதேச விமான நிலையத்திற்கு வொஷிங்டனிலிருந்து விசேட விமானம் ஒன்றை கொண்டுவந்து தரையிறக்கும் முயற்சிகளில் அங்குள்ள இலங்கைத் தூதரகம் முயற்சி மேற்கொண்டுள்ளது. "வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்வில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்." என வொஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்காவில் எந்தவொரு சர்வதேச விமான நிலையத்திலிருந்தும் எமெரெட்ஸ் விமானங்கள் ஊடாக 16ந் திகதி டுபாய்க்கு வந்தடையும் இலங்கையர்களை அங்கிருந்து விசேட விமானம் மூலம் இலங்கையின் மத்தள விமான நிலையத்திற்கு எடுத்து வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

### கல்வித் திட்டத்தில் மாற்றம் இளவயதில் பல்கலைக்கழகங்களுக்குள் புக வாய்பு

கல்வித் திட்டத்தில் மாற்றம் - இளவயதில் பல்கலைக்கழகங்களுக்குள் புக வாய்ப்பு

"தற்போது பல்கலைக்கழகங்களுக்குள் உட்புகும் வயதை விட ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் முன்னதாக மாணவர்களை அரச பல்கலைக்கழகங்களுக்குள் சேர்த்துக் கொள்வது தொடர்பான சாத்தியங்களை ஆராயும் பேச்சுக்களை உயர்கல்வி அமைச்சு கல்வி அமைச்சுடன் மேற்கொண்டுள்ளது" என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பீ.திஸாநாயக்க தெரிவித்தார். பல்கலைக்கழக துணைவேந்தர்களின் குழுவினால் முன்மொழியப்பட்ட இத்திட்டத்தை தான் கல்வித்துறை நிபுணர்களிடம் மேலதிக ஆய்வுக்காக கையளித்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். பட்டதாரிகள் பலர் வயதடைவதால் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாக தெரிவித்த அமைச்சர் தற்போது முதலாவது பட்டத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கே 26 அல்லது 27 வயது வரை செலவிடவேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### நுகர்வோர் பாதுகாப்புச் சபை 300 மில்லியன் ரூபாவினை தண்டமாக அறவிட்டுள்ளது.

ஒழுங்கற்ற வியாபாரிகள் மீது மேற்கொள்ளப்பட்ட 120,000 சுற்றிவளைப்புக்களின் போது 300 மில்லியன் ரூபா தண்டமாக நுகர்வோர் பாதுகாப்புச் சபை அறவிட்டுள்ளதாக அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்தார். தான் அமைச்சராக பொறுப்பேற்ற 2010 இலிருந்து 3 ஆண்டுகளுக்குள் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளதுடன் வருடமொன்றிற்கு 40,000 சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது சாதனை ஆகுமென தெரிவித்துள்ளார்.

### வாரமொன்றுக்கு 3 HIV நோயாளிகள்

இலங்கையில் வாரமொன்றுக்கு HIV தொற்றுடைய நோயாளிகள் இலங்கை வைத்தியசாலைகளுக்கு தற்போது வருகை தருகின்றமை தெரியவருகின்றது. வெளிவரும் 10 நோயாளிகளில் 9 நோயாளிகள் ஆரம்ப இளவயதில் உள்ள நோயாளிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

### கஞ்சா சுற்றிவளைப்பில் விசேட அதிரடிப்படை

அரச வனவளப் பகுதிகளில் கடுங்காடுகளுக்குள் கஞ்சா தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபட்டிருந்தனர். உடவளவவின் அரச வனப்பகுதிகளில் 3 நாட்களாக 300 விசேட அதிரடிப்படை கமாண்டோக்களாலும் 30 போதைப்பொருள் தடுப்பு காவல் துறையினராலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது 50 - 60 ஏக்கர் நிலப்பரப்புக்களில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா பயிர்ச்செய்கைகள் அழிக்கப்பட்டன. எனினும் அங்கிருந்த சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர். அவ்வாறு தப்பியோடியவர்களிலிருந்து கைத்தொலைபேசி ஒன்றை மீட்டுள்ளதாகவும் அத்தொலைபேசி ஊடாக கஞ்சா சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுள்ளதாகவும் காவல்துறை அறிவித்துள்ளது.

கடந்த வாரம் காவல் துறை சாஜன் ஒருவர் 8 கிலோ உலர்ந்த கஞ்சாவை சொகுசு வாகனமொன்றில் கடத்திய போது விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இத்தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டது.

## The Leader

### லீடர் பத்திரிகையின் பத்திரிகையாளர் சுடப்பட்டார்.

ஞாயிறு லீடர் பத்திரிகையின் ஊடகவியலாளரில் ஒருவரான பராஸ் சவுக்கத்அலி மௌன்லவினியாவிலுள்ள தற்காலிக தங்குமிடத்தில் வைத்து அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுடப்பட்டார். துப்பாக்கிச் சூட்டின் பின் அவரது வீட்டின் பின்புறத்திலிருந்து மூவர் தப்பி ஓடியதாக கண்கண்ட சாட்சியினர் தெரிவித்தனர். கழுத்தில் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்த நிலையில் இவர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அவர் தங்கியிருந்த வீட்டின் ஏனைய அறைகளில் தங்கியிருந்த வெளிநாட்டவர்களால் அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தார். களுபோவில வைத்தியசாலையின் வைத்தியர்கள் துப்பாக்கிச் சன்னம் கீழ்க் கழுத்துக்கும் தோல்பட்டைக்கும் இடையில் பாய்ந்துள்ளதாக தெரிவித்தனர். அதன் பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இச்சம்பவத்தினைத் தொடர்ந்து சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்விடயம் தொடர்பான முழுவிசாரணைகளையும் மேற்கொள்ளும் படி காவல்துறை மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். தற்போது வரை சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### முஸ்லிம்களுக்குகெதிராக உயிர்க்கொலை அச்சுறுத்தல் அஞ்சல் ஊடாக விடுக்கப்பட்டுள்ளது.

குருணாகலை மாவட்டத்தின் நரம்மள பிரதேசத்திலுள்ள சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட முஸ்லீம் வியாபாரிகளுக்கெதிராக உயிர்ப்பறிப்பு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இவ் அச்சுறுத்தல் அஞ்சல் ஊடாக விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திர கட்சியின் குருணாகல் மாவட்ட அமைப்பாளர் அப்துல் சதாரின் கூற்றுப்படி மார்ச் மாதம் 31ம் திகதிக்கு முன் முஸ்லீம் வியாபாரிகள் தங்களது வியாபார ஸ்தலங்களை மூடி வெளியேறி விட வேண்டும் என்றும் அஃதில்லாவிடில் அவர்கள் கொலை செய்யப்படுவார்கள் என்றும் மிரட்டல் கடிதங்கள் அஞ்சலிடப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பாக காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் வாக்களிப்பு உரிமைபெற்ற அங்கத்தவர்கள் உலகத் தமிழ்ப் பேரவையைச் சந்திக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுவின் வாக்களிக்கும் உரிமை பெற்ற நாடுகளின் பரதேச அமைச்சின் பிரதிநிதிகள் 27ம் திகதி உலகத்தமிழர் பேரவையுடனான சந்திப்பொன்றை பிரித்தானிய பாராளுமன்றத் தொகுதியில் மேற்கொள்ளவுள்ளனர். இச்சந்திப்பின் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உட்பட ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தினால் இலங்கை மீதான ஆலோசனைக்கென நியமிக்கப்பட்டவரும் தென்ஆபிரிக்க மனித உரிமைத் தாபகருமான யஸ்மின் சூகாவும் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தொடரில் "யுத்தச் சூனியப் பிரதேசம்" எனும் படத்தினை களம் மக்ரே திரையிடவுள்ளார். இப்படம் அவரால் நெறிப்படுத்தப்பட்ட இலங்கை தொடர்பான "இலங்கைப் படுகொலைக் களங்கள்" தொடரின் மூன்றாவது தொடர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் "ஆம்னஸ்டீ இன்டநெஷனல் அமைப்பின் யோவன்டா போஸ்டர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் முன்மொழிவு - விடயம் 4 இன் கீழ்" எனும் தொடரையும் வெளியிடவுள்ளது. அவ்வெளியீட்டின் போது "பாலியல் கொடுமைகள்" எனும் தலைப்பில் ஹியூமன் ரைட்ஸ் வொட்ச் அமைப்பு அறிக்கையொன்றை விநியோகிக்கவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் விளையாட்டு செய்திகள்

## 49 டெஸ்டில் வெற்றி
### தென் ஆபிரிக்க அணித்தலைவர் சுமித் சாதனை



பாகிஸ்தானுக்கு எதிரான 2வது டெஸ்டிலும் தென் ஆப்பிரிக்கா வென்று தொடரை கைப்பற்றியது. 3 டெஸ்ட் கொண்ட தொடரில் ஜோகன்ஸ்பர்க்கில் நடந்த முதல் டெஸ்டில் 211 ஓட்டங்களால் தென்ஆபிரிக்கா வெற்றி பெற்று இருந்தது. தற்போது கேப்டவுனில் நடந்த 2வது டெஸ்டில் 4 விக்கெட்டில் வென்றது. இதன்மூலம் டெஸ்ட் தொடரை வென்ற தென்ஆப்பிரிக்க அணி தொடர்ந்து 6வது டெஸ்ட் தொடரை கைப்பற்றி முத்திரை பதித்துள்ளது. மேலும் தொடர்ந்து 5வது டெஸ்டில் வெற்றி பெற்றது. இந்த வெற்றிமூலம் தென்ஆபிரிக்க அணித்தலைவர் சுமித் புதிய சாதனை படைத்தார். டெஸ்டில் இவரது தலைமையில் 49 வெற்றி கிடைத்துள்ளது. இதன்மூலம் டெஸ்டில் அதிக வெற்றி பெற்ற அணித்தலைவர் என்ற சாதனையை அவர் படைத்தார். இதன் முன்பு ரிக்கிபாண்டிங் 48 டெஸ்டில் வெற்றி பெற்றதே சாதனையாக இருந்தது.

## ஆப்கானிஸ்தான் அணியை வலுப்படுத்த இந்தியா உதவி

தீவிரவாதிகளுக்கு எதிரான போரால் ஆப்கானிஸ்தான் பாதிக்கப்பட்டு உள்ளது. தற்போது அங்கு அமைதி திரும்பிவருகிறது. இதையடுத்து அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் காண கவனம் செலுத்தி வருகிறது. இதில் ஒரு அங்கமாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியை பலமிக்கதாக உருவாக்க திட்டமிட்டுள்ளது. ஏற்கனவே ஆப்கானிஸ்தானில் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான அணி உருவாக்கப்பட்டு உலக கோப்பையில் பங்கேற்றது. அவர்கள் அனைவரும் 19 வயதைக் கடந்து விட்டதால் 20 வீரர்கள் கொண்ட புதிய அணியை உருவாக்கியுள்ளது. மலேசியாவில் வருகிற மே 1 முதல் 12 வரை 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான ஏசியன் கிரிக்கெட் கவுன்சில் கோப்பைக்கான போட்டி நடக்கிறது. இதில் இடம்பெற ஆப்கானிஸ்தான் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதில் சிறப்பாக விளையாடினால்தான் உலக கோப்பை போட்டியில் விளையாட தகுதி பெறமுடியும். இதையடுத்து அணியை பேட்டிங் மற்றும் பந்து வீச்சில் பலப்படுத்த ஆப்கானிஸ்தான் திட்டமிட்டுள்ளது. இதற்காக இந்திய கிரிக்கெட் வாரியத்தின் உதவியை நாடியுள்ளது. இதுதொடர்பாக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரிய அதிகாரிகள் மும்பை வந்து இந்திய கிரிக்கெட் வாரிய நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்கள். இதில் ஆப்கானிஸ்தான் அணியை பலப்படுத்த தேவையான உதவிகளை இந்தியாவிடம் முறைப்படி கோரப்பட்டது. கூட்டத்தில் இந்திய கிரிக்கெட் வாரிய செயலாளர் சஞ்சய் ஜக்டேல், பொது மேலாளர் ரத்னானர் ஷெட்டி ஆகியோரும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியம் சார்பில் அதன் தலைவர் 'காஸதா மசூத் திட்ட மேலாளர் பீர் ஸ்டானெக்ஸாய் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக - சமிந்த வாஸ்

இலங்கையின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் சமிந்த வாஸ், இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக இரண்டு வருட கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் சுழற்பந்து வீச்சாளர்களுக்குரிய ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஏற்கனவே இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர்களோடு செயற்பட்டு வருகிறார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளராக இணையுமாறு சமிந்த வாஸை இலங்கைக் கிரிக்கெட் சபை அணுகிய போது சமிந்த வாஸ் அதற்கு விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், சமிந்த வாஸின் ஊதியக் கோரிக்கை தொடர்பாக இழுபறி நிலவிவந்தது. தற்போது இரு தரப்பினரிடையே ஊதியம் தொடர்பாக இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், அதன் காரணமாக அவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற நியூசிலாந்து, இலங்கை அணிகளுக்கிடையிலான டெஸ்ற் தொடரில் நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக சமிந்த வாஸ் சிறப்பான முறையில் செயற்பட்டதையடுத்து அவர் மீதான கவனம் அதிகமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, இலங்கைத் தேசிய அணியின் முகாமையாளராக மைக்கல் டி சொய்ஸா நியமிக்கப்பட்டுள்ளார். அண்மையில் பதவி விலக்கப்பட்ட சரித் சேனநாயக்கவிற்குப் பதிலாகவே அவர் பதவியில் நியமிக்கப்-பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ வினியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

## ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீராங்கனை லிசா ஸ்தலேகர் ஓய்வு

இந்தியாவில் நடந்த பெண்கள் உலக கோப்பையை ஆஸ்திரேலியா வென்றது. இந்த வெற்றிக்குப் பிறகு அந்த அணியின் சகலதுறை வீராங்கனை லிசா ஸ்தலேகர் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். நடந்து முடிந்த இறுதி போட்டியில் 20 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து இரண்டு விக்கெட் வீழ்த்தினார். மேலும், மேற்கிந்திய அணியின் கடைசி விக்கெட்டை பிடி எடுப்பின் மூலம் வீழ்த்தினார். இவர் 2001-ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுகமானார். ஆஸ்திரேலிய அணிக்காக 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 416 ஓட்டங்களும், 125 ஒருநாள் போட்டியில் 2728 ஓட்டங்களும், 54 இருபது பந்து பரிமாற்ற போட்டிகளில் விளையாடி 769 ஓட்டங்களும் எடுத்துள்ளார். ஒருநாள் போட்டியில் 146 விக்கெட்டும், 20க்கு இருபது பந்து பரிமாற்ற போட்டியில் 60 விக்கெட்டும் வீழ்த்தியுள்ளார். ஒருநாள் போட்டியில் 1000 ஓட்டங்கள் மற்றும் 100 விக்கெட் வீழ்த்திய முதல் வீராங்கனை இவர் ஆவார். 2007, 2008-ம் ஆண்டுக்கான ஒருநாள் போட்டியின் ஐ.சி.சி.யின் சிறந்த வீராங்கனையாக இவர் தேர்வு செய்யப்பட்டார்.



## காயம் காரணமாக வங்காளதேச தொடரில் ஜெயவர்த்தனே ஆடவில்லை

கைவிரலில் ஏற்பட்டுள்ள காயம் காரணமாக வங்காள தேசத்துக்கு எதிரான தொடரில் இலங்கை முன்னாள் அணித்தலைவர் ஜெயவர்த்தனே ஆடவில்லை. இந்த காயம் காரணமாக அவரால் 6 வாரத்துக்கு விளையாட முடியாது. டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்கள் எடுத்த இலங்கை வீரர் ஜெயவர்த்தனே ஆவார். வங்காளதேச அணி மார்ச் மாதம் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டி மற்றும் ஒரே ஒரு 20 ஓவர் போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் வருகிற 8ம் திகதி தொடங்குகிறது.



## அன்புவழிபுரத்தில் கிராமிய விளையாட்டுக்களும் கலாசார நிகழ்வுகளும்

அன்புவழிபுரம் அன்பு இந்து சமூக நலன் மேம்பாட்டுக்கழகம், அன்புவழிபுர அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு நடாத்தும் கிராமிய விளையாட்டு கலாசார நிகழ்வு 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் அன்புவழிபுரம் தி/கலைமகள் மகாவித்தியாலயத்தில் இடம்-பெறுகின்றது. சனிக்கிழமை 23ம் திகதி கிராமிய விளையாட்டுக்களும் 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலாசார நிகழ்வுகளும் இடம்பெறவிருக்கின்றன.

## திருமலையில் இரத்ததான முகாம்








திருக்கோணமலை வைத்தியசாலை மற்றும் ரோயல் சர்வதேச நிறுவனம் என்பன இணைந்து நடாத்திய இரத்ததான முகாமொன்று 21.02.2013 வியாழக்கிழமை அன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள ரோயல் சர்வதேச நிறுவனத்தில் இடம்பெற்றது.

## மழையால் அழிந்தன வயல் நிலங்கள்

கடந்த வாரத்திற்கு முன்னைய நாட்களில் திருகோணமலை மாவட்டத்தில் பரவலாக பெய்த கடும் அடைமழையால் தம்பலகாமம் பகுதியில் பெருமளவிலான வயல் நிலங்கள் நீருள் மூழ்கியுள்ளன. இதன் காரணமாக விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இழப்பீடுக-ளுக்கான கொடுப்பனவுகளை அரசு வழங்குமென விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

இதேவேளை கந்தளாய், கோமறங்கடவெல, வெருகல், ஈச்சிலம்பற்று, கிளிவெட்டி மற்றும் மூதூர் ஆகிய பிரதேச வயல் நிலங்களும் கடுமையான வெள்ள பாதிப்புக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 23. 02. 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.